15-12-53

# கண்ணன்

170

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

170
1-54

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 JAN 1954



# கேட்டீர்களா!

## ராஜாஜிக்கு டாக்டர் பட்டம்

டில்லி சர்வகலாசாலை, பட்டமளிப்பு விழாவில் சென்னை முதல் மந்திரி ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியாருக்கு 'டாக்டர் ஆப் ஸிவில் லாஸ்' என்ற பட்டம் வழங்கப்பட்டது. இந்தப் பட்டத்தை உப ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவருக்கு வழங்கினர்.

## குழந்தைகளுக்காகச் சினிமாப் படங்கள்

குழந்தைகளுக்காக இந்திய சர்க்கார் இரண்டு சினிமாப் படங்கள் தயாரிக்க எண்ணியிருக்கிறார்களாம். ஆறு வரலாற்றுப் படங்களைக் குழந்தைகள் ரஸிப்பதற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப் போகிறார்களாம்.

## சென்னையில் பொருட்காட்சி

இந்த வருஷமும் தேனுபேட்டையில் அகில இந்திய காதி, சுதேசி பொருட்காட்சி டிசம்பர் மாதம் 23-ஆம் தேதியன்று ஆரம்பமாகிறது. கலைமகள் - கண்ணன் ஸ்டால் (No. 119) விசேஷமாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. பொருட்காட்சிக்கு விஜயம் செய்யும் குழந்தைகள் கண்ணன் ஸ்டாலுக்கும் திரளாக வந்து செல்ல வேண்டும். உங்களுக்கு வேண்டிய புத்தகங்கள், பரிசுப் பாக்கெட்டுகள் அங்கே வழக்கம்போல் கிடைக்கும்.

## குழந்தை வயிற்றில் குழந்தை

லண்டனில் உள்ள 3 வயதுச் சிறுவன் எப்போதும் 'பசி பசி' என்று கபந்தனைப்போல ஆகாரம் சாப்பிட்டு வந்தான். எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்ததில் அவன் வயிற்றுக்குள் உயிரற்ற கரு ஒன்று இருந்ததாம். அதை ஆபரேஷன் செய்து எடுத்த பிறகு, பையன் சாதாரணமாக இருந்து வருகிறான்.

## கல்கத்தா டெஸ்ட் மாட்ச்

வெள்ளி விழாக் கிரிக்கெட் 3-ஆம் டெஸ்ட் மாட்சு டிசம்பர் 31-ஆம் தேதி கல்கத்தாவில் நடைபெறப்போகிறது. இந்தியக் கட்சியில் பின்கண்டவர்கள் ஆடப்போகிறார்கள்: அதிகாரி (காப்டன்), உம்ரிகர், ஹஸாரே, பட்கர், ராம்சந்த், மஞ்ரேகர், குலாம் அகமத், ராய், கத்காரி, குப்தே, ஸென். 12-ஆம் நபர் கெயிக்வாட். இதற்கு அடுத்த டெஸ்ட் மாட்சு சென்னையில் ஜனவரி மாதத்தில் நடைபெறும்.

## அமராவதி அணைக்கட்டு

உடுமலைப்பேட்டையிலிருந்து (கோவை ஜில்லா) 15 மைல் தூரத்தில் அமராவதி நதியில் ஒரு பெரிய அணை கட்டப் போகிறார்கள். அந்தத் திட்டவேலையை நம் முதல் மந்திரி ராஜாஜி இந்த மாதம் துவக்கி வைத்தார். இதைக் கட்டி முடிக்க நாலு வருஷங்கள் ஆகுமாம்.

கண்ணன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 JAN 1954
MADRAS

## பொருளடக்கம்

மலர்: 4 இதழ்: 18

15 - 12 - '53

| | | |
|---|---|---|
| குழந்தைகளே ! | பக்கம் .. | 2 |
| அசட்டுப் பிச்சு | .. | 3 |
| குண்டுப் பூனை | .. | 9 |
| வெள்ளை மாளிகை | .. | 13 |
| இரு கடிதங்கள் | .. | 20 |
| சமயோசித புத்தி | .. | 26 |
| தேன் கிணறு | .. | 29 |
| பம்பாயில் இரண்டாவது டெஸ்ட் | | 34 |
| மாஸ்டர் பாலகுமார் | .. | 35 |
| பச்சோந்தி | .. | 36 |
| கேட்டீர்களா? - | இரண்டாவது அட்டை | |
| புதிய தொடர்கதை | நாலாவது அட்டை | |

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி
மூன்றும் சேர்ந்த
குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

# சோல்ஜரின் வீரம்

பிரஷ்ஷிய மன்னர்களில் பெரும் புகழ் பெற்றவர் இரண்டாம் பிரெடரிக். அவர் படையில் ஓர் ஏழை ராணுவ வீரர் இருந்தார்.

மற்ற வீரர்கள் எல்லாரும் பாக்கெட் கடிகாரம் வைத்திருந்தனர். இவரால் பணம் கொடுத்துக் கடிகாரம் வாங்க முடியவில்லை. ஆனால் கடிகாரச் செயின் மாத்திரம் இருந்தது. பெருமைக்காக இவர் அந்தச் செயினை ஒரு துப்பாக்கி ரவையோடு பொருத்தி, பைக்குள் போட்டுக் கொண்டார்.

வீரர்கள் எல்லாரும் இந்த ஏழைச் சோல்ஜர் கடிகாரம் வைத்திருக்கிறார் என்று மன்னரிடம் சொன்னார்கள்.

ஒரு நாள் ராணுவத்தினர் 'மார்ச்' செய்யும்போது திடீரென்று அரசர் அந்தச் சோல்ஜரை, "மணி என்ன நண்பரே?" என்று கேட்டார்.

சோல்ஜருக்கு ஒரே திகிலாய்ப் போய்விட்டது. அரசரின் ஆணைக்குப் பணிந்து வீரர் தம் ரவையையும் செயினையும் வெளியே எடுத்தார்.

மற்ற வீரர்கள் கொல்லென்று நகைத்தனர். அரசருக்குக் கூடச் சிரிப்பை அடக்கமுடியவில்லை. "என்ன, இதுதான் உங்கள் கடிகாரமா? இதை ஏன் பையோடு வைத்திருக்கிறீர்கள்?" என்று அரசர் கேட்டார்.

அதற்குள் அந்தச் சோல்ஜர் சமாளித்துக்கொண்டு, "மன்னருக்கு எப்போதாவது ஆபத்து நேர்ந்தால், உடனே எதிரியை இந்தத் துப்பாக்கி ரவையால் சுட்டுத் தள்ளுவேன்!" என்று கம்பீரமாகச் சொன்னார்.

சோல்ஜரின் அன்பை மெச்சி அரசர் ஒரு தங்கக் கடிகாரத்தைப் பரிசளித்தார்.

—கே. எஸ். பி.

31787

# குழந்தைகளே!

கண்ணனுக்கு இந்த இதழுடன் நாலாவது ஆண்டு பூர்த்தியாகிறது. உங்களுடைய அன்பினாலும் பாராட்டுதல்களினாலும் கண்ணன் மேலும் மேலும் வளர்ந்து, ஐந்தாவது வயதை எட்டிவிட்டான்.

தளர் நடை போட்டுத் தவழ்ந்த கண்ணன் இப்போது சிற்றடி வைத்துச் சிறுநடை பழகுகிறான். இந்த நாலு ஆண்டுகளாக உங்களுடைய இனிய தோழனாகவும், அன்புக் கதைகள் சொல்லும் ஆசை நண்பனாகவும் இருந்து வந்திருக்கிறான். இனியும் உங்கள் அபிமானத்தை எப்படியெல்லாம் கவரவேண்டுமோ அப்படியெல்லாம் திகழ்ந்து கவரக் கண்ணன் சிறிதும் தவறமாட்டான்.

நீங்கள் கண்ணனுக்காக நாலு ஆண்டுகளில் மொத்தம் ரூ. 12/--தான் செலவிட்டிருக்கிறீர்கள். ஆனால் எத்தனை விஷயங்கள் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது! எண்ணிப் பாருங்கள். கணக்கு வழக்கின்றி உங்களுக்குக் கையிலிருப்பதையெல்லாம் வாரி வாரி எடுத்து வழங்குவதே கண்ணனின் குறிக்கோள். அதையே இனியும் கண்ணன் செய்து வருவான்.

கதைகளா? அருமையான உயர்ந்த கதைகள்தான் கண்ணனில் வரும். பாடல்களா? தப்பும் தவறும் இல்லாத சிறந்த கருத்தும் செவிக்கின்பம் தரும் சொற்களும் நிறைந்த பாடல்கள்தான் கண்ணனில் வரும். பொழுது போக்கா? உங்கள் அறிவையும் உடலையும் வளர்க்க உதவும் விஷயங்களே கண்ணனில் வரும். ஹாஸ்யத் துணுக்குகளா? உங்கள் உள்ளத்தில் கள்ளமின்மையை வளர்க்கக்கூடிய ஹாஸ்யங்களே இடம் பெறும். போட்டிகள், பெரியோர்களுடைய கட்டுரைகள், சித்திரக் கதைகள், தொடர்கதைகள், உங்கள் சந்தேகங்கள் முதலிய எல்லாப் பகுதிகளும் வழக்கம்போல் புது வருஷத்திலிருந்து வெளிவரும். இன்னும் எளிமையும் சுவையும் மிகுந்த பல புதிய அம்சங்களையும் கண்ணன் அவ்வப்போது தாங்கி வருவான். மூன்று ரூபாய்ச் சந்தாவுக்கு முப்பது ரூபாய் கொடுத்தாலும் தகும் என்று உங்கள் பெற்றோர்களும் ஆசிரியர்களும் பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அடுத்த இதழில் நமது ராஜ்ய கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா தம்முடைய இளம்பருவத்து நிகழ்ச்சி ஒன்றை மிகவும் சுவைபடச் சொல்லுகிறார். மற்றும் வழக்கமான அம்சங்கள் எல்லாம் அதில் நிறைந்திருக்கும்.

பொங்கல் இதழில் புதிய தொடர்கதை ஒன்று ஆரம்பமாகிறது. அற்புதமும் சாகஸமும், வீரமும் பராக்கிரமும், குதூகலமும் கொண்டாட்டமும் நிறைந்த ஒரு சரித்திரக் கதை அது. ஆணா, பெண்ணா என்று பெயரிலிருந்து கண்டுபிடிக்க முடியாத 'ஜனா' என்பவர் அந்த அருமையான தொடர்கதையை எழுதுகிறார். உங்கள் அறிவுக்கும் ஆசைக்கும் விருந்தான கதை.

உங்கள் சந்தாவை உடனே அனுப்பி விடுங்கள்! உங்கள் நண்பர்களிடமும் ஞாபகமாகச் சொல்லுங்கள்.

—ஆசிரியர்.




அடையாற்றில் இன்ஸ்பெக்டர் குருப்பின் பங்களா தனியாக இருந்தது. சகல வசதிகளும் நிறைந்திருந்தது. மாடியில் நின்று பார்த்தால் கிழக்கே வானைத் தழுவி நிற்கும் நீலக் கடல் தெரிந்தது. வெண் அலைகள் புரண்டு விழும் அதன் கரை தெரிந்தது. பங்களாவைச் சுற்றி மூன்று புறமும் பழச் செடிகளும் மரங்களும் உள்ள தோட்டம் இருந்தது. பட்டணத்தில் ஒரே நெரிசலும் சந்தடியும் மிகுந்திருக்கும் என்று அசட்டுப் பிச்சு கேள்விப்பட்டிருந்தான். ஆனால் இந்த இடம் அதற்கு நேர் மாறாக இருந்தது. சுற்றிலும் அமைதியும் அழகும் சுத்தமும்நிறைந்துகாணப்பட்டது.

“இந்த ஊர் இவ்வளவு ஜோராக இருக்கும் என்று எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் இங்கேயே படிக்க வந்திருப்பேனே!” என்றான் பிச்சு.

“என்னை இங்கே மாற்றுவார்கள் என்று எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் உனக்கு யோசனையே சொல்லியிருப்பேனே!” என்றார் இன்ஸ்பெக்டர்.

அந்த வீட்டில் அவர் தனியாகத்தான் இருந்தார். ஒரு மலையாளத்துப் பையன் அவருக்குச் சமையல் செய்து போட்டு வந்தான். பிச்சு மாடியில் நின்றபோது அவன் வந்து, “இன்ஸ்பெக்டர் உன்னே பேசக் கூப்பிடறான்” என்று மரியாதையில்லாமல் பேசுவதைக் கேட்டுத் திடுக்கிட்டான். அப்புறம்தான் விஷயம் விளங்கியது. அவனுக்குத் தமிழ் சரிவரப் பேசத் தெரியாது. அவன் தப்பும் தவறுமாகத் தமிழ் பேசுவதைக் கேட்டுப் பிச்சு விழுந்து விழுந்து சிரித்தான்.

இன்ஸ்பெக்டர் குருப் முன்னால் சாப்பிட்டுவிட்டுத் தம் வேலையைப் பார்க்கப் புறப்பட்டார். அவர் பிச்சுவைப் பார்த்து, “நீ குளித்துச் சாப்பிட்டுவிட்டு ஓய்வு எடுத்துக் கொள். மத்தியானத்துக்கு மேல் நான் திரும்பி வருவேன். அப்புறம் உன்னை இங்கே வரவழைத்த காரணத்தைச் சொல்லுகிறேன்” என்று கூறிவிட்டுப் போனார்.

பிச்சு இதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. இன்ஸ்பெக்டர் போனதும் அவன் தோட்டத்தைச் சுற்றி பார்க்க விரும்பினான். அங்கே ஒரு பெரிய கிணறும் பக்கத்தில் பெரிய சிமிட்டித் தொட்டியும் இருந்தன. பிச்சு அது நிறையத் தண்ணீர் அடித்து நிரப்பி

னன். அதனுள் இறங்கி, குளத்தில் துளைவதுபோல் ஆனந்தமாகக் குளித்தான். அந்தத் தொட்டியில் குளித்தபோது ஓர் உண்மை தெரிந்தது. அந்தப் பங்களாவின் மேல் மாடி அறையில் நடப்பது எல்லாம் அங்கிருந்து பார்த்த போது பளிச்சென்று தெரிந்தது.

ஆச்சரியத்திலும் ஆச்சரியம் என்னவென்ருல் அவன் தொட்டியைவிட்டு எழுந்திருக்க எண்ணிய போது யாரோ மேல்மாடி அறையினுள் நுழைந்து வருவது தெரிந்தது. அசட்டுப் பிச்சு தண்ணீரில் தலையை மட்டும் நீட்டிக்கொண்டு கவனித்தான். உள்ளே நுழைந்து வந்தவன் பின்னுல் கதவைத் தாளிட்டான். ஜன்னல் புறம் வந்து கீழே எட்டிப் பார்த்தான். நல்லகாலம், அவன் பார்வையில் தண்ணீர் தொட்டி பட்டிருக்காது என்று தோன்றியது. அவன் ஒருவரும் இல்லை என்று துணிந்து கோட்ஸ்டாண்டிலிருந்த சாவிக் கொத்தை எடுத்தான். அந்த மாடி அதிக உயரமில்லாததால் பிச்சுவுக்கு எல்லாம் தெளிவாகத் தெரிந்தன. ஜன்னல் புறமாகப் பார்த்து நின்ற பீரோவை அவன் அந்தச் சாவியினுல் திறந்தான். பீரோவினுள் வெள்ளிப் பாத்திரங்களும் விலையுயர்ந்த ஆடைகளும் இருந்தன. அந்த ஆள் அவற்றைத் தொடவில்லை. நடுவில் இருந்த டிராயரை மெல்ல வெளியே இழுத்தான். மடியிலிருந்து ஏதோ ஒன்றை அதில் வைத்தான். நீண்ட உறை ஒன்றை அதிலிருந்து எடுத்துப் புரட்டிப் பார்த்தான். பிறகு அதை எடுத்து மேஜைமேல் வைத்துவிட்டு டிராயரை மூடி, பழையபடி பூட்டினுன்.

பிச்சு இவ்வளவுதான் கவனித்தான். அவனுக்குத் திடீரென்று ஏதோ சந்தேகம் தட்டியது. அந்த ஆளைத் தடுத்துப் பிடிக்க முடியாது போனுலும் அவனுடைய முக அடையாளத்தையாவது கவனிக்கலாம் என்று தோன்றியது. உடனேயே சட்டென்று தொட்டியிலிருந்து வெளிக்கிளம்பி, ஈரம் சொட்டச் சொட்ட, கிழக்குப் புறமாக இருந்த வாசல் வழியாக உள்ளே நுழைந்தான். மாடிக்குச் செல்லும் வழியும் வீட்டின் கூடத்துக்குச் செல்லும் வழியும் அங்கேதான் சந்தித்தன. பக்கத்தில் ஒரு மேல்துண்டு ஒரு கொடியில் காய்ந்து கொண்டிருந்தது. அதை எடுத்துத் தலையைத் துவட்டிக்கொண்டே உட்புறம் எட்டிப் பார்த்தான். மலையாளத்துப் பையன் சமையலறையில் ஏதோ வேலை செய்யும் சத்தம் கேட்டது. 'சரி; இனித் தாமதிப்பதில் பயனில்லை' என்று மாடிப் படிகளை நாலே தாவாகத் தாவி மேல்மாடியை அடைந்தான். நல்ல வேளை! உள்ளே இருந்த ஆள் இன்னும் வெளிப்பட்டதாகத் தெரியவில்லை. பீரோவைப் பூட்டும் சாவிக்கொத்தின் ஒலி கேட்டது. சரியான சாவி தெரியாமல் அவன் தடுமாறுகிருன் என்பதை ஊகிக்க வெகு நேரமாகவில்லை. பிச்சு மேலே என்ன செய்வது என்று புரியாமல் சிறிது தயங்கினுன். கதவைத் தட்டுவோமா அல்லது வெளிப்புறம் தாளிட்டு உள்ளேயே அவனைச் சிறைவைத்து விடுவோமா என்று யோசித்தான்.

கிளிக் - கிளிக் - கிளிக்---

பீரோவை இன்னும் பூட்டியாக



வில்லை. பிச்சு உடனே அந்த அறையின் இடப் புறத்தையும் வலப் புறத்தையும் எட்டிப் பார்த்தான். அதற்கு ஒரே வழிதான் இருந்தது. மற்ற வழி வாசல் புறமாகத் தெரிந்த மாடி வராந்தா. அவன் தப்பிக்க வேறு மார்க்கமில்லை என்பது புரிந்ததும் பிச்சு சிறிதும் தயங்காமல் வெளிப்புறத்து நாதாங்கியை இழுத்துத் தாழ்ப்பாள் போட்டுவிட்டான்.

அதற்குப் பிறகுதான் அவனுக்கு வேறு ஒரு யோசனை தோன்றியது. வந்த ஆள் வீட்டு வேலைக்காரனாக இருப்பானோ ஒரு சமயம் என்று எண்ணினான். அல்லது இன்ஸ்பெக்டரே போலீஸ் ஸ்டேஷனிலிருந்துகொண்டு அவனை அனுப்பி எதையாவது எடுத்து வரச் சொல்லியிருப்பாரோ என்றும் தோன்றியது. கதவைத் திறந்து, ''யாரப்பா நீ?'' என்று கேட்டுவிடலாமா என்றுகூட எண்ணிவிட்டான். அப்புறம்தான் அதைவிட அசட்டுத்தனம் வேறு ஒன்றும் இல்லை என்று பட்டது. அப்படி அவர் அனுப்பி வந்தவனாக இருந்தால் மலையாளத்துப் பையனுக்குத் தெரிந்திருக்குமே; அவனைக் கேட்டால் போகிறது. இல்லை; உள்ளே மாட்டிக் கொண்டவனே திருடனாக இல்லாவிட்டால் சப்தம் போட்டுக் கூப்பிடட்டுமே என்று தோன்றியது.

இப்படி எண்ணினானோ இல்லையோ நடப்பது நடக்கட்டும் என்று தலையை ஆட்டிக்கொண்டு கீழே வந்தான். ''டேய் பையா!''

என்று சமையலறையைப் பார்த்துக் கூப்பிட்டான்.

"எந்தா ஸாமீ!" என்று அந்தப் பையன் வெளியில் எட்டிப் பார்த்தான்.

"உன் பேர் என்னடா?"

"ஞென் பேரு?--குட்டிக் கிருஷ்ணனுண!"

"ஓ! ஹலோ! குட்டிக்கிருஷ்ணன்! இவிடெ யாரானும் வந்தார்களா? உனக்குத் தெரியுமா?" என்று மலையாளமும் தமிழும் கலந்து பேசினுன்.

"இவிடேயா? ஐயோ - யாரேயும் ஞான் கண்டிட்டில்லியே -"

"காணல்லியா?யாரோ பின்னே வந்தாப்பலே இருந்ததே? உனக்கு ஒண்ணும் தெரியாதா?"

"உம்..ம்" என்று அவன் கையைவிரித்தான்.

"சரி இங்கே பார்! நீ போய் நான் வருகிறவரையிலும் வாசல் படியண்டை நின்றுகொண்டிரு. நான் இதோ டிரஸ் பண்ணிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, பிச்சு முன் ஹாலுக்குள் போனுன்.

அவசர அவசரமாகத் தன் வழக்கமான டிரஸ்ஸை அணிந்துகொண்டு வாசல்புறம் ஓடோடியும் வந்தான். அதுவரையிலும் எந்தவித மாறுதலும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. மேலே மாட்டிக்கொண்டவன் கீழே இறங்கினதாகவோ, இறங்குவதற்கு வழி இருந்ததாகவோ தெரியவில்லை.

"சரி; நான் இங்கே இருக்கிறேன். நீ போய் உன் வேலையைக் கவனி!" என்று சொல்லி, அந்தப் பையனை உள்ளே அனுப்பிவிட்டு, பிச்சு வாசல் முற்றத்தில் இறங்கி நின்றுன். மேலே அண்ணாந்து மாடி அறையைப் பார்த்தான்.



மற்ளுெரு வாசல் அந்தப் பக்கம் தான் இருந்தது. உள்ளேயிருப்ப வன் தப்பிக்க வேண்டுமாஞல் இந்த வழியாக வந்து, மாடி வராந்தாவைத் தாண்டி, கீழே குதிக்கலாம். அவன்தான் அங்கே காவல் நிற்கிருனே? உள்ளே யிருந்து அவன் கூப்பாடு போட்டுக் கூப்பிடுகிருஞ என்று சிறிது கவ னித்தான். அப்படியும் காணேம். தான் கீழே காவல் இருப்பதை உணர்த்துவதற்காக அவன் மெது வாகச் சீட்டியடித்துக்கொண்டே கீழ்ப்புறமாக வந்து, தண்ணீர்த் தொட்டி வழியாக உள்ளே பார்த் தான். வெள்ளையாக ஆடைகள் தெரியவே, "சரி ஆள் உள்ளே தான் இருக்கிருன்" என்ற தைரி யம் வந்தது. உடனே வந்த



வழியே திரும்பி வாசலுக்கு வந்து விட்டான்.

பொழுது போகப் போகப் பசி வயிற்றைக் கிள்ளியது. உடனே இன்ஸ்பெக்டர் குருப்புக்குப் போன் செய்யலாமா என்ருல் எந்த இடத்துக்கு எப்படிச் செய் வது என்றும் புரியவில்லே. அந்த இன்ஸ்பெக்டர் வீட்டு டெலி போன் மாடியில்தான் துர திருஷ்ட வசமாக இருந்தது. எனவே அந்தப் பையனைக் கூவி யழைத்தான்.

"அடேய், ஒரு தட்டில் சாதத் தைப் பிசைந்து இங்கேயே கொண்டுவாடா. மரத்தடியில் உட்கார்ந்து சாப்பிட ஆசையாக இருக்குடா!" என்ருன்.

மலையாளத்துப் பையன் அவ னுக்கு உடந்தையாக இருந்து அவன் மேலே போய்க் கதவைத் திறந்துவிட்டரல் என்ன செய்வது என்ற யோசனே வேறு உதித்தது. உடந்தையாக இல்லாவிட்டாலும் தெரியாத்தனமாகத் திறந்து விட்டு விட்டாலும் மோசமாகி விடுமே என்ற கவலையும் சேர்ந்து கொண்டது. அதனுல் சாப்பாடு கொண்டுவந்த பையனைப் பார்த்து, "நீயும் நான் சாப்பிடும் வரையில் இங்கேயே இரு!" என்று உத்தர விட்டான்.

சாப்பாடு ஆயிற்று. மாடியைப் பார்த்துப் பார்த்துக் கண்ணும் பூத்துப்போயிற்று. பிச்சு மெல்ல வாசல் கேட்டுக்கு வந்து, இன்ஸ் பெக்டர் வருகிருரோ என்று கவ னிக்க வந்தான். அவன் கேட்டி லிருந்து திரும்பினுனே இல்லையோ, தடாலென்று அவன் காலடியில் யாரோ ஓர் ஆள் அப்படியே சாஷ் டாங்கமாக வந்து விழுந்தான்.

பிச்சுவுக்கு ஒன்றும் புரியவில்லே. அந்த ஆள் ஏன் இப்படி வந்து

விழவேண்டும் என்பதும் புரியவில்லை. மாடியிலிருந்த ஆள் வேறு மாதிரியாக இருந்தானே, இவன் யார் என்று சந்தேகமாக இருந்தது.

"தம்பி, பிச்சு! நீ வந்திருக்கிறது எங்களுக்குத் தெரியாது. இப்பத்தான் தெரிஞ்சு கொண்டோம். எங்களை எப்படியாவது நீதான் காப்பாத்தணும்!" என்று ஹோ என அழும் குரலில் பேசினன்.

"பூம்..பூம்.." என்று அந்தச் சமயத்தில் அசந்தர்ப்பமாக இன்ஸ்பெக்டரின் மோட்டார் சைக்கிள், பங்களா வளைவுக்குள் நுழையவே அந்த ஆள் எழுந்து செடிப் பக்கமாகப் பதுங்கி நிற்க முயன்ருன். அசட்டுப் பிச்சுவும் அவனைப் பின்பற்றி நின்ருன்.

"என்ன ஏ. பி.. ஏன் இங்கே நிற்கிறே? யார் இவன்?" என்ருர் குருப்.

"தெரியல்லியே—"

"தெரியல்லியா? பின்னே என் அவன் உன் காலில் வந்து விழருன்?" என்ருர் குருப்.

"இவனையும் தெரியாது. மேலே ஒரு ஆள் மாட்டிக்கொண்டிருக்கிருனே, அவனையும் தெரியாது" என்ருன் பிச்சு.

இன்ஸ்பெக்டர் குருப் அந்தப் புது ஆளின் பிடரியைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு பங்களாவினுள்ளே நுழைந்தார்.

சிறிதும் தாமதிக்காமல் விடுவிடென்று மேல் மாடியை அடைந்தார். நாதாங்கியைத் தள்ளிக் கதவைத் திறந்தார்.

உள்ளே அந்த ஆள்—

"ஓ!—ரொம்ப மும்மரமாக வேலை நடக்கிருப்பலே இருக்கே!" என்று சொல்லிக் கொண்டே போனை எடுத்தார் இன்ஸ்பெக்டர்.

அடுத்த ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் போலீஸ் வான் வந்தது. பிச்சுவின் காலில் விழுந்த ஆளும் மாடியில் மாட்டிக்கொண்ட ஆளும் கைகளில் விலங்குகளுடன் அதில் ஏற்றப்பட்டார்கள்.

குருப் உடனே பிச்சுவை அழைத்து அவன் முதுகில் தட்டிக்கொண்டே, "பிச்சு! நீ மேல் நாட்டில் மட்டும் பிறந்திருந்தால் எப்படி இருப்பாய், தெரியுமா? அடடா! எத்தனை பெரிய சாதனை!" என்ருர்.

"இவர்கள் யார், எங்கே வந்தார்கள்?" என்ருன் பிச்சு.

"உனக்குத் தெரியாமலா ஆட்களைப் பிடித்திருக்கிருய்? போக்கிரி; எல்லாம் உனக்குத் தெரியும். ஆனல் நமக்கு இப்போது பேச நேரமில்லை. உடனே ஹார்பருக்குப் போகவேண்டும். உனக்குப் புரியாத விஷயங்கள் சிலவற்றை அங்கே நீயே புரிந்து கொள்ளலாம்" என்ருர் இன்ஸ்பெக்டர்.

மோட்டார் சைக்கிள் புறப்பட்டது.

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு ஒரு மோட்டார் படகில் ஏறிக்கொண்டு இன்ஸ்பெக்டரும் பிச்சுவும் துறைமுகத்தில் நின்ற கப்பலை நோக்கிச் சென்ருர்கள்.

பிச்சு எல்லாவற்றையும் பிரமிப்புடன் பார்த்துக்கொண்டு வந்தான்.

(தொடரும்)

# குண்டுப் பூனை

ஈ. ஸ்ரீ.



மணிகண்டபுரம் என்ற ஊரில் முறுக்கு மீசை முத்தண்ணா என்று ஒருவன் இருந்தான். அவன் ஒரு பெரிய ராக்ஷஸன் மாதிரி இருப்பான். அவனுடைய மீசை அடர்ந்து கற்றையாக இருக்கும். அவன் அதை அடிக்கடி முறுக்கி விட்டுக்கொள்ளுவான். அந்த ஊரில் அவனைப் பார்த்தால் எல்லோரும் பயப்படுவார்கள். அவனோடு ஒருவரும் பேசமாட்டார்கள்.

அவன் ஒரு பூனையை வளர்த்து வந்தான். அது நன்றாகப் பருமனாய் இருந்தது. அதை எல்லோரும் குண்டுப் பூனை என்று சொல்லுவார்கள். அதை யாரும் மிரட்டக் கூடாது. மிரட்டினால் முத்தண்ணா சண்டைக்கு வந்துவிடுவான்.

முத்தண்ணாவுக்குப் பிள்ளை குட்டி ஒன்றுமே கிடையாது. மனைவி மிகவும் சாது. அவள் நல்ல பிள்ளை ஒன்றை வளர்த்துப் படிப்புச் சொல்லிக் கொடுக்க ஆசைப்பட்டாள். அவள் என்ன செய்ய முடியும்? முத்தண்ணாதான் முரடன் ஆயிற்றே!

குண்டுப் பூனை, மற்றப் பூனைகளோடு சண்டை போடும். இரவில் ஒருவரையும் தூங்க விடாது. 'கர், புர்' என்று கத்தும்.

கொஞ்ச நாளில் அந்தப் பூனை மற்றவர்களுடைய வீட்டில் புகுந்து, நெய், தயிர், பால் முதலியவைகளைத் திருடித் தின்ன ஆரம்பித்தது. ஒரு சமயம் ஒரு வீட்டுக்காரர் அந்தப் பூனையைத் தடிகொண்டு மெல்ல ஓர் அடி அடித்து விட்டார். அந்தப் பூனை, 'மியாவ், மியாவ்' என்று கத்திக் கொண்டே, முத்தண்ணா வீட்டிற்குள் சென்றது.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த முத்தண்ணாவுக்கு அதிகக் கோபம் வந்துவிட்டது. அந்த வீட்டுக்காரனைக் கன்னத்தில் இரண்டு அறைகள் அறைந்தான். அவன் எமலோகம் போய்த் திரும்பி வந்தான். அப்படி இருந்தன அந்த அறைகள்.

மேலும், "நீ அயோக்கியன். என் பூனையை எப்படி அடிப்பாய்? அது எடுக்காதபடி நீ சாமான்களைக் காப்பாற்றிக் கொள்!" என்றான்.

அதே ஊரில், ஓர் ஏழை வீடு. அந்த வீட்டில் தாய், தந்தை, பிள்ளை ஆக மூன்று பேர்கள் இருந்தார்கள். பையன் பெயர் சந்தானம். எப்பொழுதும் துருதுருப்பாகத்தான் இருப்பான். வயது எட்டு; கெட்டிக்காரன்.

அவர்கள் ஓர் எருமை வைத்திருந்தார்கள். அந்த எருமையின் பாலைக்கொண்டுதான் ஜீவனம். ஒரு நாள் வீட்டில் பாலை உறியில் வைத்துவிட்டுக் காவலுக்குச் சந்தானத்தைப் பார்த்துக்கொள்ள ஏற்பாடு செய்தார்கள். இருவரும் வயல் வெளிக்குச் சென்றார்கள்.

சந்தானம், வாசலில் சில பையன்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரம் கழித்து உள்ளே வந்தான். பூனை பால் பானையைக் கீழே தள்ளி உடைத்துக் கீழே பெருகியிருக்கும் பாலைக் குடித்துக் கொண்டிருந்தது. சந்தானத்துக்குக் கோபமான கோபம் வந்தது. நல்ல கம்பு ஒன்றை எடுத்துக் கொண்டு பூனையைத் துரத்திக் கொண்டே ஓடினான். முத்தண்ணா வீட்டு வாசலில் படார் என்று ஓர் அடி அடித்தான். பூனை 'மியாவ், மியாவ்' என்று அலறிக் கொண்டே உள்ளே வந்தது.

முத்தண்ணா இதைப் பார்த்தான். "யாரடா அது பூனையை அடித்தது? உன்னை யமலோகத்திற்கு அனுப்புகிறேன் பார்" என்று கையை ஓங்கி அடிக்க வந்தான்.

"முத்தண்ணா அவர்களே! சற்றுப் பொறுங்கள். நான் சொல்லுவதைக் கொஞ்சம் கேட்டுக்கொண்டு, பிறகு அடிக்கலாம்" என்றான்.

"நீ சிறு பையன். பெரியவனாய் இருந்தால் முதுகுத் தோலை உரித்திருப்பேன். நீ என்ன சொல்லப்போகிறாய்?" என்றான் முத்தண்ணா.

"எங்கள் வீட்டில் என்னைப் பாலுக்குக் காவல் வைத்துவிட்டு என் பெற்றோர்கள், புல் கொண்டு வர, வயலுக்குச் சென்றார்கள். இந்தப் பூனை பாலைக் குடித்துவிட்டது. எங்களுக்குப் பால் விற்றுத் தான் ஜீவனம். நாங்கள் என்ன செய்வோம்?" என்றான் பையன்.

"அதற்குப் பூனை என்ன செய்யும்? நீ ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்காகப் பூனையை அடிக்காதே" என்றான்.

"உன் வீட்டில் அது இம்மாதிரி செய்ததானால் நீ அடிக்க மாட்டாயா? சும்மா விட்டு விடுவாயா? நீ தண்டிக்கும்போது நான் காட்டினால், அப்பொழுது என்ன செய்வாய்?" என்றான் பையன்.

"அயலாரையே அடிக்கக் கூடாது என்று சொல்லும்போது, நான் எப்படி அடிப்பேன்? நான் இதை அருமையாய் வளர்க்கிறேனே?" என்றான் முத்தண்ணா.

"நீ தண்டிப்பதை நான் காண்பித்தால்..என்ன பந்தயம் வைத்துக்கொள்ளுகிறாய்?" என்றான் பையன்.

"என் சொத்தை உனக்கு எழுதி வைத்து விடுகிறேன். நான் உன் சொற்படி நடக்கிறேன். அப்படிச் செய்யத் தவறினால், நீ என்ன செய்வாய்?" என்றான் முத்தண்ணா.

"என்னை நீ எது வேண்டுமானாலும் செய்யலாம். என் கழுத்தை வேண்டுமானாலும் முறித்துவிடு" என்றான் பையன்.

பெற்றோர்கள் வீட்டிற்கு வந்ததும், சந்தானம், முத்தண்ணா

வீட்டிற்குப் பூனையைத் துரத்தி கொண்டு போயிருக்கிறான் என்று கேட்டு மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

அதே சமயம், சந்தானம் சிரித்துக்கொண்டே உள்ளே வந்தான். "நடந்த வரலாற்றைச் சொன்னான். நான் எப்படியாவது அவனை அடக்கி விடுகிறேன்" என்றான்.

ஒரு நாள் மணி பன்னிரண்டு இருக்கும். முத்தண்ணா கூடத்தில் கயிற்றுக் கட்டிலில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். முத்தண்ணா ஒரு சோம்பேறி. ஒரு வேலையும் தெரியாது. எப்பொழுதும் தூங்குவதும் சண்டை பிடிப்பதும்தான் அவனுக்குத் தெரியும்.

சந்தானம் அந்த வேளையில் கையில் ஏதோ ஒரு வஸ்துவை எடுத்துக்கொண்டு மெல்ல வந்தான். உள்ளே எட்டிப் பார்த்தான். பெரிய குறட்டை விட்டுக் கொண்டு தூங்கிக்கொண்டிருந்தான், முத்தண்ணா. மாடி கைப்பிடிச் சுவரில் அந்தக் குண்டுப் பூனை உட்கார்ந்திருந்தது. தன் காரியம் சித்தித்து விட்டதாகவே நினைத்தான்.

கையில் கொண்டுவந்த வஸ்துவை ஒரு நூல் கயிற்றால் கட்டி, முத்தண்ணா வயிற்றின்மேல் வைத்துக்கயிற்றைக்கொஞ்சதூரத்தில் பிடித்துக்கொண் டிருந்தான்.

குண்டுப் பூனை முத்தண்ணாவின் மார்பின்மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. மார்பெல்லாம், அதனுடைய கூறிய நகங்கள் பட்டு, ஒரே ரத்த வெள்ளமாக ஆகிவிட்டது.

முத்தண்ணாவுக்குக் கோபம் அதிகமாக வந்துவிட்டது. பிரம்பை எடுத்து இரண்டு மூன்று



அடிகள் படீர், படீர் என்று அடித்தான். பூனை 'மியாவ், மியாவ்' என்று கத்திக்கொண்டே ஓடிற்று.

அதே சமயம், சந்தானம் வீட்டில் நுழைந்து, "முத்தண்ணா, முத்தண்ணா! எதற்காகப் பூனையை அடிக்கிறீர்கள்? அருமையான பூனையாயிற்றே" என்றான் பையன்.

"இந்தப் பூனை இப்பொழுதெல்லாம் கெட்டுவிட்டது. என் மார்பையே தன் கூறிய நகங்களால் பூரிவிட்டது. இதைத் திருத்தவே அடித்தேன்" என்றான் முத்தண்ணா.

"நான் அன்றைக்கே பந்தயம் வைத்தேனே. 'நீ பூனையை அடிக்கும்போது நான் உனக்குக் காண்பிக்கிறேன்' என்றேன். மேலும், 'பூனை பால் திருடிக் குடிக்கிறது என்றால் நீங்கள் ஜாக்கிரதையாய் பார்த்துக்கொள்ள வேண்டும்; என் பூனையை அடிக்கக்கூடாது' என்றாய். அம்மாதிரியே, நீ என் இரும்புக் கவசம் போட்டுக் கொண்டு தூங்கக்கூடாது? பூனை என்ன செய்யும்?"

"இந்தப் பூனை இதுவரை இம்மாதிரி செய்ததில்லை. இது புதிதாக இருக்கிறது" என்றான் முத்தண்ணா.

"எது எப்படியானால் என்ன? பந்தயத்தில் நான் ஜயித்துவிட்டேன். நீ தோற்றுப் போனாய். சொன்னபடி நடக்க என்ன ஆக்ஷேபம்?" என்றான் பையன்.

அவன் அப்படியே தன் சொத்தை அவனுக்கு எழுதி வைத்து, அவன் சொற்படி கேட்பதாகவும் ஒப்புக்கொண்டான்.

சந்தானம் தன் தந்தையையும் தாயையும் அந்த வீட்டிற்கே அழைத்து வந்தான். முத்தண்ணாவின் மனைவி இந்தப் பையனைப் பார்த்ததே மிகுந்த சந்தோஷம் அடைந்தாள். தன் பிள்ளையைப் போல் வளர்த்தாள்.

அந்த ஊரிலுள்ள பையன்களெல்லாம் ஒன்று சேர்ந்தார்கள். ஒரு நாற்காலியைக் கொண்டுவந்து அதில் அவனை உட்கார வைத்து, தங்கள் தலைக்குமேல் தூக்கிக் கொண்டு, 'சந்தானத்திற்கு ஜே' என்று கத்தினார்கள்.

பிறகு அவர்கள் எல்லோரும் விளையாடும் மைதானத்திற்குச் சென்றார்கள். அங்கு அவனை மற்றவர்கள், "எப்படி அடக்கினாய்?" என்று கேட்டார்கள். மைதானத்தில், சந்தானம் கையில் ஒரு ரப்பர் எலியைக் காட்டி, "இதனால்தான் நான் முத்தண்ணாவை அடிமையாக்கினேன். ரப்பர் எலியின் கழுத்தில் ஒரு சிறிய நூலைக் கட்டி அவன் மார்பில் அதை வைத்து வெகு தூரத்தில் மறைந்து நூலைப் பிடித்திருந்தேன். பூனை அதைப் பார்த்து எகிறிக் குதிக்கும் சமயம் நான் எலியை இழுத்துக்கொண்டு ஓடிவிட்டேன். இது அவனுக்குத் தெரியாது. பூனை அவனை நன்றாகப் பிறாண்டியது. அதனால்தான் அவன் தோற்றான்" என்றான் சந்தானம்.

உடனே அங்கிருக்கும் பையன்கள், அந்த ரப்பர் எலியை ஒரு கம்பின் நுனியில் கட்டினார்கள். அதை நடுவில் பிடித்துக்கொண்டு, "ரப்பர் எலிக்கு ஜே! சந்தானத்திற்கு ஜே!" என்றார்கள்.

"முறுக்கு மீசை முத்தண்ணாவும் நல்லவராக மாறி விட்டார். ஆதலால், இனி அவருக்கும் ஜே போடுங்கள்" என்றான் சந்தானம்.

# வெள்ளை மாளிகை

## கே. சுந்தரேசன்

அப்பொழுது மாமல்லபுரம் பிரசித்தி பெற்ற துறைமுகமாக இருந்தது. மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் நிறைந்த அந்தத் துறைமுகப் பட்டினத்தில் ராஜநாராயணனின் பெயர் மிகவும் பிரசித்தியடைந்திருந்தது. பல காலமாக வெளி நாடுகளுடன் வாணிபம் செய்து செல்வம் திரட்டி வந்தான் அவன். அவனுக்கு மிகவும் அழகு வாய்ந்த மூன்று பெண்கள் இருந்தனர். அதிலும் அவனுடைய கடைசிப் பெண் நந்தினி சிறந்த அழகுடன் உயர்ந்த குணமும் கொண்டிருந்தாள்.

மற்ற இரண்டு பெண்களும் நந்தினியைப்போல இல்லாமல் மிகுந்த செருக்குக் கொண்டிருந்தார்கள்.

ராஜநாராயணனின் செல்வத்தையும், அவன் பெண்களுடைய அழகையும் பார்த்த பல இளம் செல்வந்தர்கள் அவர்களை மணந்து கொள்ளப் போட்டியிட்டு முன் வந்தார்கள். ஆனால் மூத்தபெண்கள் இருவரும் அவர்களை இழிவாகப் பேசி அனுப்பிவிடுவார்கள். அவர்களுக்கு யாராவது ராஜகுமாரர்களைக் கணவன்மாராக அடைய வேண்டுமென்று விருப்பம். நந்தினியோ அடக்கமாகத் தனக்கு இன்னும் கல்யாண வயசு வரவில்லை என்று சொல்வாள்.

ஒரு சமயம் ஒரு பெரிய துக்ககரமான செய்தி வந்தது. ராஜநாராயணனுடைய மரக்கலங்கள் புயலில் சிக்கி கடலில் மூழ்கி விட்டன என்பதுதான் அந்தச் செய்தி. அவனுடைய செல்வம் அனைத்தும் பறிபோய் விட்டன. மாமல்லபுரத்தை விட்டே அவர்கள் வெளியேறிவிட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. மூன்று பெண்களும் இடி விழுந்தது போலானார்கள்.

முன்பு வந்த செல்வச் சீமான்கள் இருவரைத் தேடி மணந்து கொண்டு அப்பாவோடு கஷ்டப்படாமல் போய்விடலாம் என்று மூத்த பெண்கள் எண்ணினார்கள். செல்வம் இருக்கும்போது வந்த அந்தச் சீமான்கள் யாரும் இப்போது அவர்களைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. ஆனால் நந்தினியைத் தேடி வந்தவர்கள் இப்பொழுதும் அவளை மணந்து கொள்ளத் தயாராக இருந்தார்கள். நந்தினிதான் மறுத்துவிட்டாள்.

ஒரு வருஷம் இவ்விதம் அவர்கள் படாதபாடு பட்டார்கள். ஒரு நாள் வெகு தூரத்திலுள்ள பூம்புகார்த் துறைமுகத்தில் அவனுடைய கப்பல் ஒன்று திசை கெட்டுப் பத்திரமாய்த் திரும்பி வந்திருப்பதாகத் தகவல் எட்டியது. புயலில் அது எப்படியோ தப்பிப் பிழைத்துவிட்டது.

ராஜநாராயணன் பொருள்களை மீட்டு வரப் புறப்பட்டபோது வைரமும் வைடூரியமும் வேண்டுமென்று மூத்த பெண்கள்

கேட்டார்கள். நந்தினியோ, "அப்பா! பாரிஜாதப் புஷ்பம் என்று சொல்கிறார்களே—அந்தப் புஷ்பம் எங்காவது கிடைத்தால் ஒன்று கொண்டு வாருங்கள்" என்றாள். பாரிஜாதப் புஷ்பம் அப்போது இந்த நாட்டிலேயே கிடையாது. தேவலோகத்தில் மட்டுமே அது கிடைக்கும் என்று சொல்லக் கேட்டிருந்தான் ராஜநாராயணன்.

'இதற்கு என்ன செய்வது? தேடிப் பார்க்கலாம்' என்று எண்ணிக்கொண்டு அவன் குதிரை ஒன்றின் மீது ஏறிப் பூம்புகாரை அடைந்தான்.

பூம்புகாரில் தன்னுடைய மரக்கலத்தையும், பொருள்களையும் பொன்னுக விற்றுக்கொண்டு மூத்த பெண்களுக்கு வேண்டிய வைரமும் வைடூரியமும் வாங்கிக் கொண்டான். ஆனால் பாரிஜாதப் புஷ்பத்துக்கு எங்கே போவது? ஆகவே அவன் வழியெல்லாம் நந்தவனங்களையும், சோலைகளையும் சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தான். இப்படி வரும்போது ஒரு நாள் ஒரு நடுக்காட்டின் வழியே ஒரு பாதை செல்வதைக் கண்டு, தன் குதிரையை அந்த வழியே செலுத்தினான்.

இருள் கவிந்து வந்தது. நிர்மானுஷ்யமான அந்தக் காடு அங்கே அடர்த்தியாகவும் மேலே போக வழியில்லாமலும் இருந்தது. வெகு தூரத்தில் நட்சத்திரம் மினுக்குவது போல் ஒரு வெளிச்சம் தெரிந்தது. ராஜநாராயணன் குதிரையை மிகவும் சிரமப்பட்டு அந்தத் திக்கை நோக்கிச் செலுத்தினான். கடைசியில் வெண்மை நிறத்தில் ஒரு பிரம்மாண்டமான மாளிகை இருப்பதைக் கண்டான்.

ஆனால் அங்கே மனிதசஞ்சாரம் இருப்பதாகவே தெரியவில்லை. இருளில் அந்த மாளிகை 'ஹோ' வென்று மூடிக் கிடந்தது. ராஜநாராயணன் குதிரையைவிட்டு இறங்கினான். மெல்லக் கதவைத் தட்டினான். சப்தமே இல்லை. பிறகு பலம் கொண்ட மட்டும் ஓங்கி இடித்தான். கடைசியாக ஒரு குரல், "யாரது-வா உள்ளே!" என்று அதிகாரத் தொனியில் கூறியது.

கதவு திறந்து கொண்டது. ராஜநாராயணன் உள்ளே நுழைந்தான். அவன் கண்கள் அப்படியே பிரமிப்பினல் நிலை பெற்று நின்றன. அப்படிப்பட்ட ஒரு ராஜக்கிருகத்தை அவன் இதுவரை கண்டதேயில்லை. எத்தனை பெரிய கூடம்! எத்தனை அழகான சர விளக்குகள், மஞ்சங்கள்! கீழே தரையெல்லாம் நவரத்தின கம்பளங்கள் விரித்திருந்தன. சலவைக் கற்களால் ஆன சுவரெல்லாம் சித்திர வேலைப்பாடுகளுடன் கண்ணைப் பறித்தன. ஆனால் மனிதர்கள் யாரையுமே அவன் பார்க்கவில்லை. தன்னை உள்ளே வரச்சொன்ன குரல் யாருடையது என்பதும் புரியவில்லை. அவன் இவ்விதம் விழித்துக் கொண்டிருந்தபோது, "வா அப்பா! இப்படி வா! உனக்கு வேண்டிய சௌகரியங்களை நீ கூசாமல் செய்து கொள்ளலாம்!" என்று இரண்டு கரங்கள் மட்டும் காற்றில் மிதந்து வருவது போல வந்து அவனை மெல்ல அழைத்துச் சென்றன. ராஜநாராயணன் பிரமிப்பால் மூச்சுத் திணற அந்தக் கைகள் அழைத்துச் சென்ற வழியே




போனான். ஓர் அறையில் பஞ்ச பக்ஷ பரமான்னங்கள் சூடாகத் தயராக இருந்தன. அவன் கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டு வயிறார உண்டான்.

''அதோ அந்த லதா மண்டபத்தில் உனக்குப் படுக்க மஞ்சம் இருக்கிறது, போ!'' என்றது அந்தக் குரல். ''உன் குதிரையும் பத்திரமாக இருக்கிறது. அந்தக் கவலையும் வேண்டாம்'' என்றது மீண்டும்.

ராஜநாராயணன் அதிசயித்தவாறே மஞ்சத்தில் படுத்து, சுக நித்திரையில் ஆழ்ந்தான்.

பொழுது மெல்ல விடிந்தது. இதுவரையில் உணர்ந்திராத கம்மென்ற நறுமணம் சுற்றிலும் கமழ்ந்தது. அவன் கண்விழித்துப் பார்க்கையில் விதவிதமான வண்ண மலர்கள் அழகாகப் பூத்துக் குலுங்கியிருப்பதைக் கண்டான். என்ன அழகான மலர்கள்! ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியமாக, அவன் ஒரு மலரைப் பறிக்க எண்ணியபோது, ''வேண்டாம் அப்பா! அந்த அழகிய பாரிஜாத மலரைப் பறிக்காதே!'' என்று எச்சரிக்கை செய்தது அந்தக் குரல்.

''என்ன? பாரிஜாத மலரா இது?'' என்று திருப்பிக் கேட்டான் ராஜநாராயணன். அவனுக்கு உடனே நந்தினிகேட்ட புஷ்பத்தின் நினைவு வந்துவிட்டது.

''என் பறிக்கக் கூடாது என்கிறாய்? என் குமாரி ஒரு பாரிஜாத

மலர் கேட்டாள். அவளுக்காகவே கேட்கிறேன். எனக்கு ஒரு மலர் கொடுக்கக் கூடாதா?'' என்று கெஞ்சினன் அவன்.

''தருவதைப்பற்றி ஆட்சேபணை யில்லை. ஆனல் ஒரு நிபந்தனை உண்டு!''

''ஒன்று என்ன; எவ்வளவு நிபந்தனை போட்டாலும் சரிதான்.

''நிச்சயம்தானே—வார்த்தை மீற மாட்டாயே?''

''என் உயிரையே கேட்டாலும் சரிதான். ஆனல் நந்தினியிடம் சேர்ப்பிக்கும் வரையில் இருந்தால் போதும். அவள் முகம் பிரகாச மடைவதைப் பார்த்துவிட்டால் போதும்'' என்ருன் ராஜநாரா யணன்.

''நான் உன் உயிரைக் கேட்கப் போவதில்லை. நீ வீடு சென்றதும் முதலில் உன்னை யார் பார்க்கிருர் களோ, அவரை ஒரு மாதத்துக் குள் இங்கே அனுப்பிவிடவேண் டும். சம்மதமா?'' என்றது குரல்.

முன்பின் யோசியாமல் ராஜ நாராயணன் தன் சம்மதத்தைத் தெரிவித்து விட்டான். கடைசி யாக மலரைப்பறித்து எடுத்துக் கொண்டு அந்த உருவமில்லாத குரலிடம் விடையும் பெற்றுக் கொண்டு ராஜநாராயணன் தன் குதிரை மீது ஏறி மாமல்ல புரத்தை அடைந்தான்.

* * *

ராஜநாராயணனுக்கு அது பேரிடியாக இருந்தது.

நந்தினிதான் முதன் முதலில் அவனுடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்து நின்ருள். ''அப்பா!'' என முகமன் கூறி வர வேற்ருன்.

ராஜநாராயணன் அப்படியே இடிந்து போனன். கண்களி லிருந்து பொல பொலவென்று நீர் வடிந்தது. ''கண்ணே, நந்தினி! நான் உனக்குப் பெரிய அபகாரம் செய்துவிட்டேன்!'' என்று புலம் பித் துடித்தான்.

நடந்தவற்றைக் கேட்ட நந் தினி சிறிதும் கலங்கவில்லை. ஆனல் ராஜநாராயணனே, ''என்ன வந் தாலும், சரிதான். உன்னை நான் அந்த அரக்கனுக்குப் பலியிடப் போவதில்லை'' என்ருன்.

''அப்பா! இதற்கெல்லாம் பயப் பட வேண்டாம். அந்த அரக்க னுக்கும் ஓர் இருதயம் இருக்கும். நாம் இருவருமே போகலாம்'' என்று தைரிய மூட்டினுள் நந்தினி.

குறிப்பிட்ட நாள் வந்தது. ராஜநாராயணன் மனந்தேறி தன் மகளுடன் அந்த மாளிகையை நோக்கிப் பிரயாணமானுன்.

வாசலை யடைந்ததுமே, ஓர் இனிய கீதம் அவர்களை வரவேற் றது. அவர்கள் மெல்ல மாளிகை யினுள் சென்ருர்கள். முன்பு வந்த இரண்டு கரங்கள் அவர் களை வரவேற்று ஆசார உபசார மெல்லாம் செய்தன.

அவர்கள் களைப்பாறி அறுசுவை உண்டி அருந்தும் வரையில் எது வும் விசேஷமாக நடைபெறவில்லை.

அந்த மாளிகையின் அற்புத வேலைப்பாட்டைப் பார்த்து அவர் கள் வியந்து கொண்டிருக்கையில், ''உள்ளே வரலாமா?'' என்று ஒரு குரல் கேட்டது.

''தாராளமாக'' என்ருன் ராஜ நாராயணன்.

அடுத்த கணம் பார்க்கவே பயங்கரமான ஓர் உருவம் முன்னல் வந்தது. அடேயப்பா,

மனித உருவில் வந்த அந்த அரக்கனுடைய கோர உருவத்தை எப்படிக் கண்ணெடுத்துப் பார்ப்பது! நந்தினி பயத்தால் நடுங்கிஞள்.

அந்த அரக்கன், "நல்லது! ராஜநாராயணு! உன் நாணயமான நடத்தையை மெச்சுகிறேன். மனிதர்களிடத்திலே இத்தகைய நாணயம் இருப்பது அரிது. நீ உயிருக்கு உயிராக நேசிக்கும் உன் அருமைக் குமாரி இவள்தானே?" என்று இனிமை பொங்கும் குரலில் கேட்டான்.

"ஆமாம்; இப்படி இவள் என் முன் வருவாள் என்று நான் எண்ணவில்லை!" என்ருன் வியாபாரி.

"ஆனல்··எனக்குத் தெரியும். சரி அதிருக்கட்டும்; நாளேக் காலேயே நீ திரும்பிவிட வேண்டும். உன் குமாரிக்கு இங்கு ஒருவிதக் குறைவும் நேரிடாது. அந்தக் கவலே உனக்கு வேண்டாம்" என்று சொல்லிவிட்டு அரக்கன் வெளியேறினன். பார்ப்பதற்கு அவன் எவ்வளவு கோரமாக இருந்தானே அவ்வளவுக்கு அவ்வளவு அவனுடைய ஆடைகளும், அவன் பேசிய வார்த்தைகளும் மிகக் கவர்ச்சிகரமாக இருந்தன.

மறுநாள் காலேயில் ராஜநாராயணன் அந்த அரக்கன் கூறியபடி புறப்படத் தயாராஞன். நந்தினி வருத்தம் தாளாமல் அழுதாள். அவள் தந்தையும் கண்ணீர் வடித்தான்.

நந்தினி அவன் சென்றபின் குதூகலமாகவே இருக்க முயன்ருள். எதை வேண்டுமென்று நினேத்தாளோ அது தயாராக வந்து நின்றது. அவள் உள்ளே வந்து ஸ்நானம் செய்தாள். சாப்பாடு தயாராக இருந்தது. சாப்பிட்டாள். தோட்டத்துக்குச் சென்று பக்ஷிகளோடும் மான்களோடும் விளேயாடினுள். அஸ்தமனமான பிறகு மாளிகைக்குள் நுழைந்தாள்.

முதல்நாள் நேரம் வந்தது. அரக்கன் அவள் அநுமதியுடன் உள்ளே வந்தான். "அருகில்



உட்காரலாமா?'' என்று கேட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

''இதோ பார், நந்தினி! இந்த மாளிகையின் அரசி நீதான். நீ விரும்பாவிட்டால் ஒரு க்ஷணமும் நான் இங்கே இருக்க மாட்டேன்!'' என்ருன்.

நந்தினி அந்த அரக்கனுடைய கண்ணியமான பேச்சைக் கேட்டுச் சிறிது தைரியமடைந்தாள்.

''சரி; நான் வருகிறேன், நந்தினி'' என்று மரியாதையாகச் சொல்லிவிட்டு அந்த அரக்கன் வெளியேறி விட்டான்.

மறுநாள் அவளுக்கு மேலும் ஆறுதலாகவே இருந்தது. அரக்கன் பார்வைக்கு எப்படி யிருந்தாலும் அவன் பேச்சு அமுதம் போன்று இனித்தது. இரவு வந்த பிறகு அவனும் அவள் எதிர் பார்த்தபடியே வந்தான். இருவரும் முதல் நாளைப்போலவே உரையாடினுர்கள்.

இப்படியே சில நாட்கள் கழித்து ஒருநாள் அவன் அவளைப் பார்த்து, ''நந்தினி! நான் உன்னை மணந்து கொள்ள விரும்புகிறேன். உன் விருப்பம் என்ன?'' என்ருன்.

அதற்கு அவள் பதிலே சொல்லவில்லை. மேலும் சில வாரங்கள் சென்றன. ''என்ன நந்தினி, நீ பதிலே சொல்லவில்லையே!'' என்ருன் அரக்கன்.

''அதெப்படி முடியும்? ஆனுல் உங்களுக்கு மனவருத்தம் ஏற்படா வண்ணம் நான் பேசி வருவேன்'' என்ருள் அவள்.

அரக்கன் மகா வருத்தத்துடன், ''அதனுல் ஒரு பிரயோஜனமும் இல்லை. நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளாவிட்டால் இறந்தே போவேன்'' என்று சொல்லி விட்டுப் போனுன்.

நந்தினிக்குத் தன் தந்தையின் ஞாபகம் வராமல் போகாது. அப்பொழுதெல்லாம் அவள் கண்ணீர் பெருக்கி மனம் சோர்வாள். இதைக் கண்ட அரக்கன், ''நந்தினி! இதோ இந்தப் பாரிஜாத மலரை வைத்துக்கொள். குறிப்பிட்ட நாளில் திரும்பி வருவதாக இருந்தால் நீ உன் தந்தையைப் பார்க்கப் போகலாம். இந்த மலர் நீ நினைத்த உடன் புறப்படும். ஆனுல் ஒன்று: நீ சொன்னபடி திரும்பி வர வேண்டும்'' என்ருன். அவ்விதமே நந்தினி வாக்குறுதி கொடுத்து விட்டு, பாரிஜாத மலரின் உதவியால் தந்தையின் எதிரே வந்து நின்ருள். அவளுடைய அழகுமிக்க ஆடையாபரணங்களையும் தோற்றத்தையும் கண்ட அவளுடைய சகோதரிகள் பொருமையினுல் வெதும்பிப் போனுர்கள். 'அவளை எப்படியாவது குறித்த நேரத்தில் திரும்பிப் போக முடியாதபடி செய்ய வேண்டும். அதனுல் அரக்கன் கோபங்கொண்டு அவளைத் தொலைத்துவிட வேண்டும்' என்று அவர்கள் இருவரும் முடிவுசெய்து கொண்டார்கள். அதன்படி அந்தப் பாரிஜாத மலரை எடுத்து நந்தினி காணுத இடமாகப் பார்த்து ஒளித்து வைத்து விட்டார்கள். நந்தினி மாளிகைக்குத் திரும்ப வேண்டும் என்பதையே மறந்துவிட்டாள்.

குறித்த கெடு முடிவடைந்தும் அவள் திரும்பும் ஞாபகமே இல்லாமல் இருந்தாள். மறுநாள் மூத்த சகோதரி பாரிஜாதமலர் வாடிக்

கிடப்பதைப் பார்த்துவிட்டு நந்தினியிடம் வந்து, "மலர் வாடி விட்டதே!" என்றாள். நந்தினி, "எங்கே?" என்று கையில் வாங்கிக் கொண்டதுமே மலர் மறுமலர்ச்சி பெற்றுவிட்டது. கம்மென்ற மணம் கமழ்ந்தது. உடனே நந்தினிக்கு மாளிகையின் ஞாபகம் வந்து விட்டது. 'அடடா! வாக்குறுதியை மறந்துவிட்டோமே!' என்று துடி துடித்துப் போய், தந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டாள்.

ஆனல் மாளிகை இப்போது களையிழந்து சோபையற்றுக் காணப்பட்டது. எங்கும் எல்லாம் சோர்வுற்றிருந்தன. நந்தினிக்கு மனம் கலங்கியது. இரவு எப்போது வரும், அரக்கனை எப்போது கண்டு மன்னிப்புக் கேட்கலாம் என்று ஏங்கினள். இரவு வந்தது. ஆனல் இன்மொழி பேசும் அரக்கனைக் காணவில்லை.

மறுநாளும் காணவில்லை. தோட்டத்திலும், மண்டபத்திலும் நின்று, "ஏ அரக்கரே!" என்று எங்கும் குரலில் கூவி அழைத்துப் பார்த்தாள். எதிரொலியைத் தவிர பதிலையே காணேம்.

"ஐயோ, நான் மணந்து கொள்ளாவிட்டால் உயிரே போய் விடும் என்ருரே—நான் கல்யாணம் வேண்டுமானலும் செய்து கொள்ளத் தயார். அவர் வந்தால் போதும், என் பிழையை மன்னித்தால் போதும்" என்று எண்ணினள். அப்படி எண்ணிய மறு கணமே தோட்டத்தில் அரக்கன் சாகுந்தறுவாயில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டாள். அவனருகில் ஓடிப்போய்ப்பார்த்தபோது, "நந்தினி.. நீ வார்த்தை தவறி விட்டாய். அதனல் நான் சாகிறேன்" என்ருன் அரக்கன்.

"நான் உங்கள் உயிரைக் காப்பாற்ற எதுவும் செய்ய முடியாதா?" என்ருள் நந்தினி.

"கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தால் முடியும்."

"அப்படியானல் நான் மனப்பூர்வமாகக் கல்யாணம் பண்ணிக் கொள்ளத் தயார்."

அடுத்த கணம் பளீரென்று மின்னலைப்போல் ஒரு வெளிச்சம் கண்ணைப் பறித்தது. கண் இமைக்கும் நேரத்துக்குள், அவள் எதிரே அரக்கன் இருந்த இடத்தில் அழகிய ராஜகுமாரன் நிற்பதைக் கண்டாள்.

அவளுக்கு நாணம் மேலிட்டது. ஆனல் அவனே, "நந்தினி! யாரோ என்று கவலையுருதே. நான்தான் இந்த மாளிகைத் தேவதையின் சாபத்தினல் இது வரையில் அரக்கனக இருந்தேன். உன்போன்ற உத்தமமான சத்தியம் பேசும் பெண் என்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தால் என் சாபம் நீங்கும் என்பது அந்த தேவதையின் கட்டளை. இப்பொழுதுதான் என் சாபம் விமோசனமாயிற்று!" என்ருன்.

ராஜகுமாரன் நந்தினியின் கையைப் பிடித்து அழைத்து வந்து மாளிகையின் தேவதையை மனசால் வணங்கினன். பிறகு ராஜநாராயணன் முதலானவர்கள் வரவழைக்கப்பட்டார்கள். ராஜகுமாரனுக்கும் நந்தினிக்கும் விவாகம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. இரண்டு சகோதரிகளுக்கும் சந்தோஷம்தான். வேறு இரண்டு ராஜகுமாரர்கள் கிடைப்பார்கள் அல்லவா?




"என்னடா, ராஜு! இந்தத் தீபாவளிக்குக்கூட நமக்கு ஒரு காமிரா கிடைக்காது போலிருக்குடா. நம்ம அக்காவுக்குத்தான் நல்ல யோகம் அடிக்கிறது. அவளுக்குப் பட்டுப் புடவை, சங்கிலி; அத்திம்பேருக்கு ட்வீடு பாண்ட், ஷர்ட் எல்லாம்.. ஆனால் நமக்கு..?" என்று தன்னையும் மீறிவந்த ஆத்திரத்துடன் கூறினாள் கீதா.

"நமக்கு என்ன..மண்ணுதான். இந்த அப்பாவே ரொம்ப முசுடு. ரெண்டு வருஷமா நமக்கு ஒரு காமிரா வாங்கிக்கொடுக்கப் பணம் இல்லையாம். அக்காவுக்கும் அத்திம்பேருக்கும் மட்டும் வாங்கறத்துக்குப் பணம் இருக்கு" என்று பொருமினான் ராஜு.

"எனக்கு ஒரு வழி தோன்றதுடா, ராஜு! அப்பாதான் வாங்கித் தரலை; கேட்டா வள்ளுனு விழறார். அத்திம்பேரைக் கேட்டா, என்ன?"

"ஆமாம், அத்திம்பேர் மட்டும் பாரிக்குத் தம்பியோ?"

"இல்லேடா, ராஜு! நான் சொல்றபடி செஞ்சா நிச்சயம் அத்திம்பேரிடமிருந்து காமிரா வாங்கிவிடலாம்" என்று ராஜுவின் காதோடு காதாக ஏதோ சொன்னாள் கீதா.

"அதானே? சரி. ஆனா அது அப்புறம் அப்பாவுக்குத் தெரிஞ்சுட்டா..? என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பினான் ராஜு.

"அதெல்லாம் ஒண்ணும் தெரியாது" என்றாள் கீதா.

நாகராஜ சர்மாவுக்கு மூன்று குழந்தைகள். சரோஜா தான் மூத்தவள். அவளுக்கு இந்த வருஷம் தலை தீபாவளி. கீதாவும் ராஜுவும் சரோஜாவின் உடன் பிறந்தவர்கள்.

சர்மா மிகவும் கண்டிப்பானவர். ராஜுவும் கீதாவும் இரண்டு வருஷத்துக்கு முன் ஒரு காமிரா வேண்டும் என்று கேட்டார்கள். "படிக்கிற அழகுக்கு காமிரா ஒன்றுதான் குறைச்சல் போடா, பணமும் கிடையாது; காசும் கிடையாது. அடுத்த வருஷம் பார்த்துக்கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டார். போன வருஷம் வாங்கிக் கொடுக்கவில்லை. இந்த வருஷமும் வாங்கித் தரவில்லை என்றால் எப்படியிருக்கும்?

* * *

கீதாவும் ராஜுவும் விறுவிறுவென்று மாடிக்குப் போனார்கள். தங்கள் அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக்கொண்டார்கள்.

"கீதா, இங்கே கொடு. நான் எழுதறேன், அத்திம்பேருக்கு! சத்தம் போடாதே, உம்..சீக்கிரம்..அக்கா, கிக்கா வந்து தொலைச்சுடப்போறா" என்று அவசரப்படுத்தினான் ராஜு.

"இல்லே, நானே எழுதறேன். எம்மேலேதான் அத்திம்பேருக்கு ரொம்பப் பிரியம்" என்று சொல்லிவிட்டு அவளே விடுவிடென்று எழுதத் தொடங்கினாள். இடையிடையே ராஜு தன் அபிப்பிராயங்களையும் கூறினான்.

கடிதம் எழுதி முடிந்ததும் ராஜு அதை வாங்கிப் படித்துப் பார்த்தான்:

"அன்புள்ள அத்திம்பேருக்கு, நமஸ்காரம். நீங்கள் சௌகரியமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். அப்பா உங்களுக்குத் தீபாவளிப் பரிசாக முந்நூறு ரூபாய்க்குக் கடிகாரம் ஒன்று வாங்கியிருக்கிறார். அதைத் தவிர ஒரு நீலக்கல் மோதிரம் வாங்கியிருக்கிறார். அக்கா உங்களுக்காக 'பஸ்ட் கிளாஸ்' உல்லன் பனியன் போட்டு வைத்திருக்கிறாள். கோடைக்கானலில் இப்போது ஒரே பனியும் மழையுமாக இருக்குமல்லவா? அதற்காக. இன்னொரு முக்கிய விஷயம்: எங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு புகைப்படப் போட்டி வைத்திருக்கிறார்கள். அதில் நானும் கலந்துகொள்ள ஆசைப்படுகிறேன். அப்பாவைக் காமிரா கேட்டால் வாங்கித்தர மாட்டேன் என்று எரிந்து விழுகிறார். (நீங்கள் அவசியம் ஒரு காமிரா இருபது ரூபாய்க்குள்) வாங்கி வரும்படி மிகமிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கடுதாசி எழுதுவது அப்பா, அம்மா, சரோஜா ஒருவருக்கும் தெரியாது. தயவு செய்து சொல்லிவிடாதீர்கள்.

இப்படிக்கு,

மிக மிகப் பணிவுள்ள, கீதா.

பின் குறிப்பு: அவசியம் முன்னால் வந்துவிடவும். அவசியம்.. காமிரா, ஞாபகமிருக்கட்டும்!"

கடிதம் மிகவும் திருப்தியை அளித்தது ராஜுவுக்கு.

இரண்டு பேருமாகச் சேர்ந்து போய்க் கடிதத்தைப் போஸ்ட் செய்தார்கள். வீட்டுக்குத் திரும்பும் வழியில் எல்லாம் இதைப் பற்றியே பேசிக்கொண்டு வந்தார்கள். "நிச்சயம், இந்தத் தீபாவளிக்

ருக் காமிரா கிடைத்துவிடும். அத்திம்பேர் வாங்கி வருவார்'' என்றுள் கீதா.

*   *   *

தீபாவளிக்கு முதல் நாள். கீதாவும் ராஜுவும் பள்ளிக்கூடம் சென்றிருந்தார்கள். அன்று அரைப் பள்ளிக்கூடம். அவர்களுக்குப் படிப்பிலே கவனம் செல்லவில்லை. 'எப்போது அத்திம்பேர் வருவார்? காமிரா வாங்கி வருவாரா? அப்பாகிட்டே சொல்லாமல் இருப்பாரா?' என்ற கவலைகள் தான்.

மணி பத்திருக்கும். 'ராஜகோபாலன், நான்காம் பாரம்' என்று ஒரு கடிதத்தைத் தபால்காரன் ராஜுவிடம் வகுப்பில் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனுன். ராஜு விலாசத்தைப் பார்த்தான். டைப் அடித்திருந்தது. இது வரையில் அவன் பள்ளிக்கூட விலாசத்துக்குக் கடிதமே வந்ததில்லை. ஆவலும் பயமும் மனத்தை உந்த மெதுவாக வாசித்தான்:

''அன்புள்ள கீதாவுக்கு,

உன் திருட்டுக் கடிதம் கிடைத்தது. உனக்குக் காமிரா வேண்டும் என்பதற்காக இது மாதிரி செய்யலாமா? நீ எழுதியபடி இன்று இரவு எட்டு மணி வண்டியில் வருகிறேன். வந்ததும் உன் தகப்பனுரிடம் சொல்லி என்ன செய்கிறேன், பார்! இதை ராஜுவிடமும் காட்டு. இதெல்லாம் ராஜுவின் யோசனை தானே? இருக்கட்டும்.

அன்புள்ள

அத்திம்பேர், அருணுசலம்.

இந்தக் கடிதத்தைப் படித்ததும் அவன் ரத்தமே உறைந்துவிடும் போலிருந்தது.

பள்ளிக்கூடம் விட்டதும் கீதாவிடம் கடிதத்தைக் காட்டினுன். ''கடிதத்தை உனக்கு எழுதி என்



பெயருக்கு விலாசம் எழுதியிருக்கிறார். உன் பேச்சைக் கேட்டு எனக்கு உதை விழப் போகிறது. நான்தான் எல்லாம் செய்திருக்கிறேன் என்று அத்திம்பேர் நினைத்துக்கொண்டிருக்கிறார்'' என்று ராஜு கீதாவின் மீது கோபத்தைக் காட்டினான்.

''இது மாதிரி ஆகும் என்று தெரியாதுடா, ராஜு! அத்திம்பேர் ரொம்ப நல்லவர் என்று நினைத்தேன். பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்துவிட்டதே'' என்றுஅவளும் வருத்தப்பட்டாள்.

''நம்ப கடிதம் கிடைத்தவுடன் அத்திம்பேர் 'அடி வாங்கத் தயாராயிரு' என்று சொல்லுவது போல் உடனே பதில் எழுதியிருக்கிறார்'' என்றான் ராஜு.

''அத்திம்பேர் வந்ததும் 'நான் தான் எழுதினேன், ராஜுவுக்குத் தெரியாது' என்று சொல்லி விடுகிறேன்'' என்றாள் கீதா.




''நீ என்ன சொன்னாலும் அவர் காதில் விழாது. அத்திம்பேரும் அக்காவிடம் சொல்லாமல் இருக்க மாட்டார். அக்கா அப்பாவிடம் உடனே சொல்லிக் கோள் மூட்டி விடுவாள்'' என்றான் ராஜு.

வீட்டில் ராஜுவுக்கு இருப்பே கொள்ளவில்லை. நாழி ஆக ஆக, பயம் அவனை உலுக்கி எடுத்தது. கீதாவும் அவனுடன் கூடத் தவித்தாள். சரோஜா பட்டாம்பூச்சி போல் உடை உடுத்துக்கொண்டு உல்லாசமாக ஓடி வேலை செய்வதைப் பார்க்கப் பார்க்க இருவருக்கும் ஒரே எரிச்சலாய் இருந்தது.

இரவு ஒன்பது மணி. அத்திம்பேர் வந்து இறங்கினார். எல்லாரும் ஓடிப்போய் அவரை வரவேற்றார்கள். ராஜுவுக்கும் கீதாவுக்கும் மனசு அடித்துக்கொண்டது.

அத்திம்பேர் வந்ததும் கை, கால்களை அலம்பிக்கொள்வதற்காகக் கொல்லைப் பக்கம் போனார். கீதாவும் அவரை நிழல்போல் பின் தொடர்ந்தாள். ''அத்திம்பேரே..வ'' என்று மெதுவாக இழுத்தாள் கீதா.

ஆனால் அவளுக்கு உடனே பக்கென்றது. அவள் அக்கா அங்கே கையில் செம்புடன் காட்சியளித்தாள்! 'சரி, இங்கேயும் இவள் எமன் போல் நிற்கிறாளே' என்று மனத்திற்குள் வைதபடி திரும்பினாள்.

அத்திம்பேரிடம் தனியாகச் சொல்வதற்குச் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை கீதாவுக்கு. ராஜு மரண வேதனை அனுபவித்தான். சாப்பாடு ஆயிற்று. அத்திம்பேர்



**நம்பர் 1: அண்ணே, இனிமே பொல்லாத்தனத்தை விட்டு விட்டு நல்லவனு மாறிடலாம்னு நினைக்கிறேன், அண்ணே. அதான் கிருதாவை எல்லாம் எடுத்துட்டேன். என்ன யோசிக்கிறே?**

**நம்பர் 2: இத்தனை நாளா நல்லவர்களுக்கும் பொல்லாதவர்களுக்கும் வித்தியாசம் தெரிஞ்சிண்டிருந்தது. இனிமே எப்படித் தெரியும்னு யோசிக்கிறேன்.**

**—முத்து, நாசரேத்.**

---

சாப்பிட்டுவிட்டு மேல் மாடிக்குப் போனுர். அக்காவும் அம்மாவும் உள்ளே சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். இதுதான் நல்ல சமயம் என்று ராஜுவும் கீதாவும் மாடிக்குப் போனுர்கள். மெதுவாக அத்திம்பேரிடம் பேச்சுக் கொடுத்தான் ராஜு. "அத்திம்பேரே, உங்க கடுதாசி கிடைச்சுது. தெரியாமே.."

"என் கடுதாசா..எது?" என்ருர் அவர்.

"இதோ, இந்தக் கடிதம்தான். நீங்க பள்ளிக்கூடத்துக்குப் போட்டது. எங்களுக்குப் புத்தி வந்துவிட்டது. இனிமே இதுமாதிரி திருட்டுத்தனம் எல்லாம் செய்ய மாட்டேன். அப்பாகிட்ட சொல்லி அடி வாங்கி வைக்காதேயுங்கோ" என்ருள் கீதா.

"இந்தக் கடுதாசை நானு உங்களுக்கு எழுதினேன்?" என்ருர் அவர் கடிதத்தைப் படித்து முடித்ததும்.

"நான் வந்து புரிய வைக்கிறேன்" என்ற குரல் கேட்டது.

எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். சரோஜா வந்துகொண்டிருந்தாள்.

"இவர்கள் எங்களுக்கெல்லாம் தெரியாமல், திருட்டுத்தனமாய் உங்களுக்கு எழுதினதை, நான் மாடிக்கு வந்தபோது சத்தம் கேட்டு, இவர்கள் அறை ஜன்னல் வழியாய்ப் பார்த்தேன். ராஜு கடிதத்தைப் படித்தது என் காதில் விழுந்தது. அப்பாவுக்குத் தெரியாமல் உங்களுக்கு எழுதினது ஒரு குற்றம். உங்களுக்கு மோதிரம், கடிகாரம், ட்வீடு பாண்ட் எல்லாம் வாங்கியிருக்குன்னு பொய் எழுதினது இரண்டாவது குற்றம். அதற்காக நான்தான் நீங்கள் எழுதினமாதிரி பக்கத்தகத்தில் டைப் செய்து பள்ளிக்கூட விலாசத்துக்கு அனுப்பினேன். அதை நீங்கள்தான் எழுதியிருக்கிறீர்கள் என்று காலையிலேயிருந்து இரண்டு பேரும் மூன்ரும் பேஸ்து மாதிரி உட்கார்ந்திருக்கிருர்கள். இந்தத் திருட்டுத்தனத்தை அப்பாகிட்டே சொல்லக்கூடாதுன்னுதான் உங்களைச் சுற்றுகிருர்கள்" என்று முடித்தாள் சரோஜா.

"அட போக்கிரிகளா.. அப்போ எனக்கு மோதிரமும் கடிகாரமும் கிடையாதா?"

"அத்திம்பேரே, தெரியாமெ செஞ்சுட்டோம். எங்களுக்குக் காமிராவும் வேண்டாம், அப்பா விடமும் சொல்ல வேண்டாம். என்னெ மன்னிச்சுடுங்கோ" என்று கெஞ்சினான் ராஜூ.

"உங்க கடுதாசைப் பார்த்து ஆயிர ரூபாய்க்கு மேலே வரும் என்றல்லவா எதிர்பார்த்தேன்? அட போக்கிரிகளா, இப்பவே போய் உங்க அப்பாகிட்டே சொல் லாட்டா, பாரு" என்று விர் ரென்று கீழே போனார்.

'கடிகாரமும் மோதிரமும் வாங்காததற்காக அப்பாவிடம் சண்டை போடப்போகிறாரே' என்று சரோஜா பீதியடைந்தாள்.



**முதல் குப்பைக்காரன்:** என்ன அண்ணே, அந்தக் காலத்திலே நாம் சேர்ந்து விளையாடினதை நினைச்சுப் பார்த்தால்......

**இரண்டாவது குப்பைக்காரன்:** அந்தப் பழைய குப்பையையெல் லாம், ஏன் கிளர்றே, தம்பி!

—மஞ்சுளா, மயிலாப்பூர்.




பத்து நிமிஷம் ஆயிற்று.

"எய், ராஜூ, கீதா..சரோஜா!"

இந்தக் குரல் மூவரையும் கிடு கிடுக்கச் செய்தது. ராஜூவுக்கும் கீதாவுக்கும் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. பலிக்குப் போகும் ஆடுகளைப்போல இருவரும் கீழே போனார்கள். சரோஜாவும் இறங்கி வந்தாள்.

அங்கே கண்ட காட்சி அவர் களைத் திகைக்க வைத்தது. அம்மாவும், அப்பாவும் இரண்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார் கள். எதிரில் அத்திம்பேர் ஒரு காமிராவுடன் காட்சியளித்தார்.

"உம், மூணு பேரும் எம் பின்னால் நில்லுங்கோ" என்றார் அப்பா.

வரிசையாக மூவரும் பின்னால் நின்றார்கள்.

கிளிக்! அடுத்த நிமிஷம் போட்டோ எடுத்தாகிவிட்டதாக அறிவித்தார் அத்திம்பேர். அந்தக் காமிரா அவர்களுக்குத்தான் என்று சொல்லவும் வேண்டுமோ?

# சமயோசித புத்தி

**என். எஸ். ஸ்ரீ.**

"சபாஷ்!" என்று சொல்லி, கோபுவின் முதுகில் ஒரு தட்டுத் தட்டிவிட்டு, "மகா புத்திசாலியடா நீ. ஐந்து நிமிஷமாய் யோசித்துக்கொண் டிருக்கிறேன். என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு செகண்டில் உபாயம் கண்டுபிடித்து விட்டாயே!" என்றான் கிட்டு.

"ஆமாம்! உனக்கு எல்லாமே ஆச்சரியம்தான்!" என்றான் கோபு.

உண்மையிலேயே அந்தச் சமயத்தில் கோபு அந்த உபாயத்தைச் சொல்லியிராவிட்டால் கிட்டுவின் பாடு பெரும் சங்கடமாகத்தான் போயிருக்கும்.

இந்தமாதிரி நடைபெறும் என்று கிட்டு எதிர்பார்த்தால்தானே! கிட்டு என்ன, அவன் தகப்பனுருங்கூட எதிர்பார்த்திருக்க மாட்டார். எதிர்பார்த்திருந்தால் அதற்கான உபாயத்தையும் சொல்லிவிட்டுப் போயிருக்க மாட்டாரா?

"கிட்டு!" என்று கூப்பிட்டார் அவன் தகப்பனுர்.

"இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே வந்தான் கிட்டு.

"நான் அவசரமாய் வெளியில் போய்வரவேண்டியிருக்கிறது. இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் ஒருவன் இங்கே பணத்துக்கு வருவான். இந்தப் பத்து ரூபாயை அவனிடம் கொடுத்து அனுப்பு" என்று சொல்லிக் கிட்டுவிடம் பத்துரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தார்.

"பேர்வழி அதிகச் சிவப்புமில்லை, கறுப்புமில்லை. மாநிறமாக இருப்பான். கிருப்புத் தலை. சுமார் முப்பது வயதிருக்கும். கொஞ்சம் நொண்டி நொண்டி நடப்பான். பெயர் மாசிலாமணி. என்ன தெரிகிறதா? வேறு யாரிடமாவது கொடுத்துவிட்டு முழிக்கப் போகிருய்?" என்று ஆளின் அடையாளத்தைச் சொல்லிவிட்டுப் போய்விட்டார் கிட்டுவின் தகப்பனுர்.

பரீட்சை மும்முரம். 'சரி, அவன் வருகிறவரைக்கும் அங்கேயே உட்கார்ந்து படிக்கலாம்' என்று கிட்டு தன் பாடத்தைப் படித்துக் கொண்டிருந்தான்.

"தம்பீ!" என்ற குரலைக் கேட்டு, தலையை நிமிர்த்தினுன் கிட்டு. எதிரே ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

"அப்பா இல்லையா?" என்றுர் வந்தவர்.

"இல்லை. சற்று முன்புதான் வெளியே சென்றுர், ஏன்? என்ன சமாசாரம்?" என்றுன் கிட்டு.

"ஒன்றுமில்லை. பணம் கொடுக்க வேண்டும். வரச் சொல்லியிருந்தார்" என்றுர் வந்தவர்.

கிட்டுவின் முகத்தில் அசடு வழிந்தது. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு, "உங்கள் பெயர் என்ன?" என்றுன்.

"மாசிலாமணி!"

பெயர், தகப்பனார் சொல்லிவிட்டுப்போன அடையாளம் எல்லாம் ஏறக்குறைய சரியாகத் தானிருந்தன.

ஆனால் அவர் நொண்டியா இல்லையா என்பதை அவன் கவனிக்கவில்லையே. இவன் தலையைக் கவிழ்ந்துகொண்டு படித்துக்கொண்டிருக்கையில் அவர் அங்கே வந்திருக்கிறார். ஆகவே அவர் நடையைக் கிட்டு பார்க்கவில்லை. கால்களைப் பார்த்தால் ஏறக்குறைய இரண்டும் சமமாக இருப்பதுபோலத்தான் தெரிந்தன. வித்தியாசம் கண்டு பிடிக்க முடியவில்லை.

“நீங்கள் நொண்டியா?” என்று அவரைக் கேட்க முடியுமா? அல்லது, “கொஞ்சம் நடந்து காட்டுங்கள் பார்க்கலாம்” என்று சொன்னால்தான் நன்றாக இருக்குமா?

இந்தத் தர்ம சங்கடத்துக்கு என்ன செய்வது என்று கிட்டு யோசித்துக்கொண்டிருக்கையில் ஏதோ புத்தகம் கேட்டு வாங்கிச் செல்வதற்காக அவனுடைய வகுப்பில் படிக்கும் கோபு அங்கே வந்து சேர்ந்தான்.

“இதோ வந்துவிட்டேன். கொஞ்சம் இருங்கள்” என்று வந்தவரிடம் சொல்லிவிட்டுக் கோபுவை வெளியே அழைத்து வந்தான் கிட்டு.

“என்ன விசேஷம்?” என்றான் கோபு.

“இப்பொழுது நான் ஒரு பெரிய சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன்” என்றான் கிட்டு.

“என்ன அப்படிப்பட்ட சங்கடம்?” என்றான் கோபு.

நடந்த விஷயத்தை யெல்லாம் சொல்லிவிட்டு, “இப்பொழுது அவனை நொண்டியா, இல்லையா என்று எப்படித் தெரிந்துகொள்வது?” என்றான் கிட்டு.

“பூ! இப்பொழுது அவனை நடக்கச்சொல்லிப் பார்க்கவேண்டும். அவ்வளவுதானே?” என்றான் கோபு.

“அவ்வளவுதான்!” என்றான் கிட்டு.

உடனே கோபு, கிட்டுவின் காதில் ஏதோ ரகசியமாய்ச் சொன்னான்.

“சபாஷ்” என்று சொல்லிவிட்டு, கிட்டு அவசர அவசரமாய் அறைக்கு ஓடிவந்தான்.

“அப்பா போகும்போது என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. அவர் வருவதற்கு இன்னும்





இரண்டு மணி நேரம் பிடிக்கும். ஆகையால் இரண்டு மணி நேரம் கழித்து வாருங்கள்'' என்றான் கிட்டு, பணம் வாங்கிச்செல்ல வந்தவரிடம்.

''சரி!'' என்று சொல்லிவிட்டு, வந்தவர் புறப்பட்டு விட்டார்.

காலைச் சாய்த்துச் சாய்த்து நடந்துகொண்டே வராந்தாவைக் கடந்து தெருப்படியில் இறங்கினார்.

இனி, சந்தேகம் என்ன?

''ஸார்! ஸார்!'' என்று அவரைக் கைதட்டிக் கூப்பிட்டான் கிட்டு.

அவரும் திரும்பி வந்தார்.

''அம்மாவிடம் சொல்லிவிட்டுப் போனாராம், நீங்கள் வந்தால் பணத்தைக் கொடுக்கச் சொல்லி. எனக்குத் தெரியாது. இப்பொழுதுதான் அம்மா சொன்னாள்'' என்று சொல்லிவிட்டுப் பத்து ரூபாய் நோட்டை அவரிடம் கொடுத்தான் கிட்டு. அவரும் விடை பெற்றுச் சென்றார்.

கோபு சொல்லிக் கொடுத்த உபாயம் இதுதான்:—

''பைத்தியமே! இதற்கா இவ்வளவு யோசனை? முதலில், 'என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. சற்றுநேரம் கழித்து வந்து அவரிடமே கேட்டு வங்கிக்கொள்ளுங்கள்' என்று சொல்லு. அவர் எழுந்து செல்வார். அப்பொழுது தெரிந்துவிடும் அவர் நொண்டியா, இல்லையா என்பது. அவர் நொண்டி நடந்தால் கொஞ்ச தூரம் சென்றதும் கைதட்டிக் கூப்பிடு. 'அம்மாவிடம் சொல்லிப் போயிருந்தாராம்' என்று சொல்லிப் பணத்தைக் கொடுத்துவிடு.''

கிட்டுவுக்குச் சிரிப்பு ஓயவே இல்லை. விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டிருந்தான்.

தகப்பனார் வந்தார். விஷயத்தைக் கேட்டு எல்லோரும் இடி இடியென்று வயிறு வெடிக்கும்படி சிரித்தார்கள்.



# தேன் கிணறு

டி. ராஜகோபாலன்

சிறுவன் அஜீப் தன் தாயுடன் கெய்ரோ பட்டணத்தில் வசித்து வந்தான். தந்தையற்ற அவன் முழுச் சோம்பேறி. படிப்பு ஏறவில்லை. தொழிலிலும் வெறும் பூஜ்யம். ஒரு நாள் சில விறகு வியாபாரிகள் அவன் வீட்டிற்கு வந்தார்கள். தாயார் தன் மகனைப் பற்றி அவர்களிடம் சொல்லி வருந்தினாள்.

அவர்கள் அவனைத் தங்களுடன் அனுப்பும்படி கேட்டார்கள். அவளும் சம்மதித்து அனுப்பினாள். அஜீப் அவர்களுடன் காட்டிற்குச் சென்று அவர்களிட்ட வேலைகளைச் செய்து வந்தான். ஒரு சமயம் காட்டில் திடீரெனப் பெருமழை பெய்தது. எல்லாரும் ஒரு மலைக் குகையில் ஒதுங்கினார்கள். அஜீப் தைரியமாகக் குகைக்குள் வெகு தூரம் சென்றுவிட்டான். அங்கே ஒரு வளையம் போன்ற பளிங்கு மூடி தென்பட்டது. அதை வலுவாக இழுத்து அப்பால் போட்டான். ஒரு கிணறு தெரிந்தது. கைக்கு எட்டக்கூடிய அளவில் ஜலம் தெரிந்தது. கையை உள்ளே விட்டுப் பார்த்தான். கையில் கெட்டியான திரவம் ஏதோ ஒட்டிக் கொள்ளவே கையை வெளியில் எடுத்து நக்கிப் பார்த்தான். அது தேன். உடனே ஒடி விறகு வியாபாரிகளை அழைத்து வந்து அதைக் காட்டினான். அவர்கள் சந்தோஷம் அடைந்தார்கள். அஜீப்பைக் காவல் வைத்துவிட்டு ஊருக்குப் போய் பெரிய பீப்பாய்களைக் கொண்டுவந்து தேனை நிரப்பினார்கள். கெய்ரோவில் தேன் அரிய

பண்டம். அஜீப்பை அங்கேயே காவல் நிறுத்திவிட்டு அவர்கள் தேனை விற்றுப் பெரிய பணக்காரர்கள் ஆனார்கள். அஜீப்புக்கு உணவு முதலானவைகள் அந்தக் குகைக்கே வந்துவிடும். கிணறு காலியாகும் தருணம். பேராசை அவர்களைப் பிடித்துக்கொண்டது. அஜீப் உயிருடன் ஊருக்குப் போனால் கிணற்றைத் தான் கண்டு பிடித்ததாக அரசனிடம் சொன்னால் என்ன செய்வது? தங்கள் லாபத்தில் பெரும் பகுதியை இழக்க வேண்டி வருமே என்று பயந்தார்கள். அதனால் அஜீப்பைக் கொன்றுவிடத் தீர்மானித்தார்கள்.

வழக்கம்போல் குகையை அடைந்தார்கள். தேன் மிகவும் ஆழத்தில் இருந்ததால் அஜீப்பை உள்ளே இறக்கி விட்டார்கள். சொட்டுக்கூட விடாமல் அவன் இறைத்ததும் அவனை அந்தக் கிணற்றிலேயே விட்டு விட்டு ஊருக்குப் போய்விட்டார்கள். சில நாட்கள் சென்றபின் அஜீப்பின் தாயார் தன் மகனைப்பற்றி விசாரித்தாள். "அவனை ஓநாய் ஒன்று அடித்துக் கொன்றுவிட்டது. உங்களை நாங்கள் காப்பாற்றுகிறோம்" என்று தெரிவித்தனர். அவள் மிகவும் வருந்திய போதிலும் எல்லாம் அல்லாவின் செயல் என்று எண்ணிச் சமாதானம் அடைந்தாள். அவளுக்கு ஒரு குறைவுமில்லாமல் அவர்கள் பார்த்துக்கொண்டார்கள்.

வியாபாரிகளின் சூதை நினைத்து அழுதுவிட்டு அஜீப் அல்லாவைப் பிரார்த்தித்தான். அப்போது அவன் மேல் ஒரு தேள் விழுந்தது. அதைக் கொன்றுவிட்டு எங்கிருந்து விழுந்ததென்று பார்த்தான். ஒரு சிறிய துவாரம் தெரிந்தது. தன்னிடமிருந்த கத்தியால் அந்தத் துவாரத்தைப் பெரிது செய்து அதன் வழியே சென்றான். ஒரு பெரிய கதவு தெரிந்தது. அதை அவனால் தள்ளக்கூட முடியவில்லை. மெதுவாகக் கொஞ்சம் கொஞ்சமாக அதைத் தள்ளி உள்ளே நுழைந்தான். கதவு திடீரென்று மூடிக்கொண்டது. பயந்து சுற்று முற்றும் பார்த்தான். தன் கண்களையே நம்பமுடியவில்லை. ஜொலிக்கும் ஒரு மண்டபம். மண்டபத்தைச் சுற்றித் தங்க நாற்காலிகள். நாற்காலிகளின்மேல் கண்ணைப் பறிக்கும் அழகு பொருந்திய மாணிக்கத்தால் ஆன பிரம்மாண்டமான நாகங்கள். இதை எல்லாம் பார்த்து அஜீப் மூர்ச்சித்து விழுந்து விட்டான். நாகங்கள் சீறி அவன்மேல் பாய்ந்தன. அப்பொழுது ஒரு நவரத்தினத் தட்டை தன் முதுகில்கொண்டு ஆதிசேஷன் போன்ற நாகம் மண்டபத்தின் நடுவே வந்தது. அந்தத் தட்டின்மேல் உடலெல்லாம் பாம்பைப் போன்றும் முகம் மட்டும் இளம் பெண்ணாகவும் காட்சியளித்த நாகராணி உட்கார்ந்திருந்தாள். அவள் தேக காந்தி அந்த அறையெல்லாம் வீசிற்று. சீறிய நாகங்களை அவள் அடக்கினாள். அஜீப்பினிடம் சென்று மயக்கம் தெளிவித்து அன்பாகப் பேசினாள். அஜீப் பிரக்ஞையடைந்து பயந்தான். ஆனால் மனிதக் குரலில் பேசும் அந்த ராணியைப் பார்த்துக் கொஞ்சம் கொஞ்சமாகத் தைரியம் பெற்றான். தன் வரலாற்றைக் கூறி

ஞன். அவள் அவனைத் தேற்றி ஆறுதல் கூறினுள்.

சில காலம் அஜீப் நாக லோகத்திலேயே இருந்தான். தாயாரிடம் போக நாகராணி அவனுக்கு அநுமதி தரவில்லை. தன் ஊரை



யும் தாயையும் நினைத்து ஏங்கி நாளுக்கு நாள் இளைக்கத் தொடங்கினுன். கடைசியில் நாக ராணியிடம், "நீ என்னை இன்னும் ஒரு வாரத்திற்குள் வீட்டில் சேர்க்காவிட்டால் நான் இறந்தே விடுவேன்" என்று வருத்தத்துடன் கூறினுன். நாகராணியும் மனசு இரங்கி, "சரி, உன்னைத் தாயிடம் சேர்க்கிறேன். ஆனுல் ஒரு நிபந்தனை. அதாவது நீ உயிருள்ளவரையில் சமுத்திரத்தில் ஸ்நானம் செய்யக்கூடாது" என்ருள். அஜீப் ஆச்சரியத்துடன் "ஏன் அப்படி?" என்ருன். "நீ அப்படிச் செய்தால் நான் இறந்து போவேன். இது அல்லாவின் கட்டளை" என்ருள்.

"எனக்கு உயிர் கொடுத்துக் காப்பாற்றிய உனக்கா அவ்விதக் கெடுதலைச் செய்வேன்? நீ சொல்கிறபடி செய்கிறேன்? இது சத்தியம்" என்று உறுதி கூறினுன் அஜீப். அவள் தன் வாகனமான ஒரு பாம்பின் மேல் அவனை ஏற்றி

அவன் தாயிடம் அனுப்பினான்.

தாய்க்கு அவனைப் பார்த்ததும் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அவனைக் கட்டிக்கொண்டு, "நீ இறந்ததாகச் சொன்னார்களே, அந்த அயோக்கியர்கள்" என்று சீறினாள்; அழுதாள். அஜீப் அவளைச் சமாதானப் படுத்தினான்.

மறுநாள் அந்த வியாபாரிகளைத் தன் வீட்டிற்கு வரும்படி சொல்லி அனுப்பினான். அஜீப் அழைத்தான் என்றதுமே அவர்கள் பயந்து விட்டார்கள். அஜீப்பைக் கொலை செய்த சதியைக் கேட்டால் அரசன் தங்களைக் கொன்றுவிடுவானே என்று நடுங்கினார்கள். உடனே ஒவ்வொருவரும் தன் சொத்தில் பாதியை அஜீப்புக்குக் கொடுத்து விடுவதென்று தீர்மானித்தார்கள். அஜீப்பின் வீட்டில் மறுநாள் அவர்கள் சந்தித்துத் தங்கள் ஏற்பாட்டைத் தெரிவித்தார்கள். அஜீப் நல்ல குணமுடையவனாதலால் அவர்களை மன்னித்தான். ஏராளமான பணத்திற்கு அதிபதியானான். பல நண்பர்கள் ஏற்பட்டார்கள்.

விசேஷ தினங்களில் அவ்வூரார் சமுத்திர ஸ்நானம் செய்வது வழக்கம். ஒரு நாள் தன் நெருங்கிய நண்பனுடன் சமுத்திரக் கரையில் உட்கார்ந்துகொண்டிருந்தான். கொடிய வேனிற் காலம். "ஒரே புழுக்கமாயிருக்கிறது. சமுத்திரத்தில் ஸ்நானம் செய்வோம் வா" என்று நண்பன் அழைத்தான். ஒரு கணம் தன் சபதத்தை மறந்து தண்ணீரில் மார்பளவு இறங்கினான். உடனே நாகராணி ஞாபகம் வரவே, மேலே ஓடிவந்து விட்டான். அஜீப்பின் தேகம் மார்புவரையில் கன்னங்கரேலென்று மாறியது. திடுக்கிட்டுத் தன் தவற்றை உணர்ந்தான்.

அரண்மனைச் சேவகர்கள் அந்தச் சமயம் அங்கு வந்து அரசன் அழைப்பதாகத் தெரிவித்தார்கள். அரசன் குஷ்டரோகி. மந்திரி அஜீப்பிடம், "அரசனை உடனே குணப்படுத்த வேண்டும். அது உன்னால்தான் முடியும். சீக்கிரம் ஆகட்டும்" என்றான். "எனக்கு ஒன்றும் தெரியாது" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தான்.

அந்த மந்திரி ஒரு பெரிய மந்திரவாதி. அவன் அஜீப்பிடம், "இதோ பார். 'சமுத்திர ஸ்நானத்தினால் ஒருவன் தேகம் உடனே கறுப்பாகும். அவனைப் பிடித்தால் அவன் நாகராணியின் இருப்பிடம் காட்டுவான். நாகராணியால்தான் அரசன் குஷ்டம் குணமடையும்' என்று எழுதியிருக்கிற ஓலை, இதோ இருக்கிறது. சமுத்திரத்தில் பல நாள் காவல் போட்டேன். அவ்வித மனிதன் அகப்படவில்லை. இன்றுதான் நீ அகப்பட்டாய். நாகராணி இருப்பிடத்தை உடனே சொல்லாவிட்டால் உன்னைச் சிரச்சேதம் செய்து விடுவேன்" என்று மிரட்டினான்.

மந்திரி அஜீப்பைச் சித்திரவதை செய்தான். வலி தாங்காமல் நாகராணி இருப்பிடத்தைக் காட்டுவதாக ஒப்புக்கொண்டு, சேவகர்களுடன் நாகலோகம் சென்றான்.

நாகராணி சோர்ந்து படுத்துக்கொண்டிருந்தாள். அஜீப் சேவகர்களை வாசலிலேயே நிற்க வைத்துவிட்டு உள்ளே ஓடிப்போய் அவள் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். தன் அநீதியை நினைத்துப் புரண்டழுதான். அவள் அவனை, "என் காலம் முடிய

வேண்டுமென்று அல்லாவின் விருப்பம். ஆகவே நீ வருத்தப்படாதே" என்று தேற்றி அவனுடன் புறப்பட்டு மந்திரியிடம் வந்து சேர்ந்தாள். மந்திரி நாகராணியைப் பார்த்தவுடன் அவளை வெட்டப் பாய்ந்தான். அஜீப் அவனை எட்டி உதைத்தான். "அற்பப் பதரே! செய்வதை ஒழுங்காகச் செய்" என்று கத்திக்கொண்டு இன்னொரு உதை வயிற்றில் உடனே கொடுத்தான். மந்திரி மயக்கமாக விழுந்தான். நாகராணி அஜீப்பிடம், "சீக்கிரம் நான் சொல்வதைக் கேள். அரசன் அழைப்பதாக மந்திரிக்கு ஆள் வரும். உன்னால் வேலையாக வேண்டியிருப்பதால் உன்னை மந்திரி மன்னித்துவிடுவான். அவன் அரசனிடம் போகுமுன் என்னைத் துண்டித்துப் பானையில் போட்டுக் காய்ச்சச் சொல்வான். காய்ச்சும்பொழுது ஆடை வரும். அதை ஒரு புட்டியில் அடைக்கச் சொல்வான். மறுபடி பானையில் ஆடை கட்டும். அதைச் சேகரித்து இரண்டாம் புட்டியில் அடைக்கச் சொல்லுவான். முதல் புட்டியை உன்னைக் குடிக்கச் சொல்லுவான். நீ குடிக்காதே. புட்டியை மாற்றிவிடு. முதல் புட்டியை அவனிடம் கொடு. இரண்டாம் புட்டியை நீ வைத்துக்கொள். பிறகு என் வெந்த இறைச்சியை அரசனுக்குக் கொடு. அவன் குணமடைவான். ஜாக்கிரதை! நான் சொன்னது நினைவிருக்கட்டும்" என்று எச்சரித்து உயிர் துறந்தாள். மந்திரி எழுந்து அஜீப்பைத் திட்டினான். இதற்குள் அரசனிடமிருந்து மந்திரிக்கு ஆள் வந்தான். நாகராணி சொன்னபடியே அஜீப்பிடம் எச்சரிக்கைகள் செய்துவிட்டு மந்திரி அரசனைப் பார்க்கச் சென்றான். திரும்பியதும் "புட்டிகள் எங்கே?" என்று கேட்டான். அஜீப் முதல் புட்டியைக் கொடுத்தான். மந்திரி குடித்ததும் சாம்பலானான். இரண்டாவது புட்டியைத் அவன் குடித்தான். என்ன ஆச்சரியம்! அவன் உடல் கறுப்பு உடனே மறைந்தது. சகல கலைஞானமும் அந்த நிமிஷமே ஏற்பட்டது. நாகராணியின் இறைச்சியை எடுத்துச் சென்று அரசனுக்குக் கொடுத்தான். அதைத் தின்றதும் நோய் தீர்ந்து முன்னைவிட அழகுடன் அரசன் விளங்கினான். உடனே அரசன் அஜீப்புக்குத் தன் மகளைக் கல்யாணம் செய்வித்து மந்திரி ஆக்கினான்.

---




**இன்ஸ்பெக்டர்:** முனியா, எங்கே இப்படி ஜெயில் பக்கம் வந்தே?

**முனியன்:** எம் மகனைப் பத்து நாளாக் காணலே. வழக்கம் போல இங்கே எங்கேயாவது வந்திருக்கானான்னு பாக்க வந்தேன்.

—குப்புசாமி, பொன்மலை.

# பம்பாயில் இரண்டாவது டெஸ்ட்

பம்பாயில் இரண்டாவது வெள்ளி விழா டெஸ்ட் மாட்சு 3-ஆம் தேதி ஆரம்பமாகியது.

முதலிலிருந்தே அதிருஷ்டம் காமன்வெல்த் கோஷ்டியார் பக்கம் இருந்தது. முதலில் அவர்கள் ஆடத் தொடங்கினர்கள்.

மடமடவென்று ஸ்கோர் விஷம் போல ஏறி இரண்டாவது நாள் 504-ஐ எட்டிவிட்டது.

பிறகு இந்தியக் கட்சி முதல் இன்னிங்ஸை ஆட ஆரம்பித்தது. விக்கெட்டுகளை லோடரும் வோரலுமாகச் சேர்ந்து மடமடவெனச் சரித்தனர். 153 ரன்களே இந்தியா எடுத்தது.

காமன்வெல்த் கோஷ்டியார் டில்லி டெஸ்ட்டை நினைவில் வைத்துக்கொண்டு பழிக்குப் பழி வாங்க எண்ணினர்கள். 301 ரன்கள் வித்தியாசமிருந்ததால் இந்தியரைத் தொடர்ந்து ஆடச் செய்து இன்னிங்ஸ் தோல்விதர எண்ணினர்கள்.

முதல் இன்னிங்ஸ்ஸில் கடைசியாக ஆடி 81 ரன்கள் எடுத்து அவுட்டான உம்ரிகர் முதலில் தொடர்ந்து ஆடினர். ஆனல் 3 ரன்கள் எடுத்ததுமே மீண்டும் அவர் வெளியேறும்படி ஆகிவிட்டது.

ஜோடியாக ஆடிய மஞ்ரேகரும் 18 ரன்கள் எடுத்து அவுட்டானர். பிறகுதான் மன்காட் - ஹஸாரே ஜோடி சேர்ந்தது; இந்தியக் கட்சிக்கு உயிரும் வந்தது. மன்காடு அற்புதமாகப் பந்துகளை அடித்து நொறுக்கி, ரன்களை அள்ளிக் குவிக்கத் தொடங்கினர். ஹஸாரேயும் மன்காடுக்கு உதவியாக இருந்தார். நான்காவது நாள் ஆட்ட முடிவின்போது மன்காடு 134 ரன்களும் ஹஸாரே 57 ரன்களும் எடுத்தார்கள். மொத்தம் 226 ரன்கள் ஆயின.

இன்னிங்ஸ் தோல்வியா இல்லையா என்று நிச்சயப்பட இன்னும் ஒரே நாள்தான் பாக்கி.

மன்காடு ஒரே மணி ஆடினர். 154 ரன்கள் எடுத்திருந்த போது விக்கெட் மேல் விழுந்து அவுட்டாகிவிட்டார். சற்றைக்கெல்லாம் ராம்சந்தோடு ஜோடி சேர்ந்த ஹஸாரேயும் 61 ரன்கள் எடுத்து அவுட்டாகிவிட்டார்.

ராம்சந்த் 18 ரன்களோடுக் வெளியேறினர். கடைசியாக கத்தாரியும் கோபிநாத்தும் ஜோடி சேர்ந்தார்கள். சமயத்தில் இரண்டு ஆட்டக்காரர்களும் பந்தை வீசி அடித்து ரன்களைக் குவிக்கத் தொடங்கினர்கள். கத்தாரி 102 ரன்கள்; கோபிநாத் 67 ரன்கள் எடுத்து மொத்த 447 ரன்கள் ஆன சமயத்தில் ஆட்டம் முடிவடைந்தது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்து மேற்கொண்டு 96 ரன்கள் லீடுடன் இந்தியா இந்தக் கண்டத்திலிருந்து தப்பியது. ஆட்டம் வெற்றி - தோல்வியின்றி முடிந்தது. அடுத்த டெஸ்ட் மாட்ச் கல்கத்தாவில் டிச - 31-ஆம் தேதி ஆரம்பமாகும். அதற்கு அதிகாரி காப்டனுக இருப்பார். —வி.


பாலகுமார்
கதை: ஆர்வி — சித்திரம்: ஸாமி
இது தான்
சரியான வழி
ஆ! நல்ல காலம்
இந்தக் கிளை மதிலுக்கு
வெளிப்புறம் வரை
யில் போகிறது.
இதில் குதித்து
விட்டால் என்ன?
வேறு வழி இல்லை!
அப்!
பஸ் நிற்காது
போலிருக்கிறதே!
எப்பொழுது இறங்
குவது?

(தொடரும்)

# பச்சோந்தி

## எஸ். டி. ஸ்ரீநிவாஸன்

"அம்மா!...."

சோம்பல் முறித்துக்கொண்டே கண்ணைத் திறந்தான் அமரநாதன். அடுத்த கணம் அவன் தேகம் படபடத்தது.

வீணையின் இனிய கானம் மெல்ல காற்றில் மிதந்து வந்து அவன் செவிகளில் நுழைந்தது.

"மகராஜ்!.... தாங்கள் தந்த சுத்தி செய்ய எல்லாம் தயாராய் இருக்கின்றன" என்ற வார்த்தைகள் அவனைத் திக்பிரமை கொள்ளச் செய்தன. பரபரப்புடன் அவன் கண்களைத் திறந்தான். ஆச்சரியத்தால் அவன் வாயும் கூடத் திறந்து கொண்டது.



அவன் ஒரு பெரிய அறையில் நல்ல கட்டிலின் மேல், பஞ்சணையில் படுத்திருந்தான். அந்த அறை மிக நன்ருக அலங்கரிக்கப்பட்டிருந்தது; பெரிய பெரிய ஜன்னல்களும், மேஜைகளும் நாற்காலிகளும், பிரம்மாண்டமான 'குளோப்' விளக்குகளும் அவன் பார்வையில் பட்டன. வெளியே சங்கீத கோஷ்டியொன்று இனிய கீதத்தைக் கிளப்பிக் கொண்டிருந்தது. இவைகளைக் கண்ட அமரநாதன் ஒன்றும் விளங்காமல் 'திருதிரு' வென்று விழித்தான்.

அடுத்த கணம் அவன் தலைப் பக்கம் நின்றிருந்த பணிப் பெண், "மகாராஜ்! தந்த சுத்தி செய்ய எல்லாம் தயாராய் இருக்கின்றன" என்ருள்.

அமரநாதன் அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான்.

"நீ யார்?..நான் எங்கிருக்கிறேன். நான் காண்பது கனவா, அல்லது நனவா?" என்ருன்.

"மகாராஜ்! நீங்கள் என்ன கேட்கிறீர்கள்? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே" என்று கேட்டாள் பணிப்பெண்.

"நானு மகாராஜன்?" ஆச்சரியதுடன் கேட்டான் அமரநாதன்.

இதற்குள் வேறு ஒரு சேவகன் அங்கே வந்து, "மகாராஜ்! ஸ்நானத்திற்கு எல்லாம் தயாராய் இருக்கின்றன" என்ருன்.

அமரநாதனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. தன் கண்களை நன்ருக ஒரு முறை கசக்கிக் கொண்டான். தன்னைக் கிள்ளிக் கொண்டான். சந்தேகமில்லை. நனவுதான், கனவில்லை.

இதற்குள் மந்திரி மாதவகுப்தன் அங்கு வந்து அமரநாதனுக்குத் தன் வணக்கத்தைத் தெரிவித்தான்.

"நீ யார்?.." என்று கேட்டான் அவன்.

மாதவகுப்தன் ஆச்சரியத்துடன் தன் புருவங்களை உயர்த்தி அமரநாதனைப் பார்த்து, "மகாராஜ்! என்ன இன்று தாங்கள் ஒரு மாதிரியாகப் பேசுகிறீர்கள்?.. தங்களுக்கு உடம்புக்கு ஏதாவதா?" என்ருன் கவலையுடன்.

பார்த்தான் அமரநாதன். சந்தேகம் தெளிந்துவிட்டது. தான் மாளவத்தின் அரசன். அப்பா! எப்படிப்பட்ட பதவி! ஆனல் எவ்வாறு அவன் அரசனுன் என்பது தான் அவனுக்குப் புரியவில்லை.

சட்டென்று அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டான்.

படுக்கையை விட்டெழுந்தான். பல் விளக்கினன். குளித்தான். காலை ஆகாரம் சாப்பிட உட்கார்ந்தான். மேஜை எங்கும் ஒரே தட்டுகள். எத்தனை வித உணவுகள், பானங்கள்!

## 2

அமரநாதன் தாய் தந்தையருக்கு ஒரே பிள்ளை. தந்தை உயிருடன் இருந்தவரையில் பள்ளிக்கூடம் போகாமல் சுற்றினன் அமரநாதன். துஷ்ட நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு பணத்தை இஷ்டப்படி செலவிட்டான். அவனுக்குப் பதினைந்து வயதாக இருக்கும்போது அவன் தந்தை இறந்துவிட்டார். தாய் சொல்லைக் கேட்காமல் தத்தாரியாய்த் திரிந்தான். செல்வத்தில் பெரும் பகுதி அழிந்த பிறகுதான் அவனுக்குப் புத்தி வந்தது. அழிந்தது போக அவ



அன்னமிட்டு, படுக்க இடமும் கொடுத்து, மறுநாள் அவர்களை வழி அனுப்புவான். தான் செய்த பாவங்களுக்கெல்லாம் பிராயச்சித்தமாக இதைச் செய்து வந்தான் அவன்.

முதல் நாள் மாலை ஒரு சந்நியாசியையும் அவருடைய சீடனையும் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். சாப்பாடு போட்டான். படுக்க இடம் கொடுத்துத் தானும் அவர்களுடன் படுத்துக்கொண்டான். ஆனால் மறுநாள் காலையில் அவன் எழுந்திருக்கும்போது அந்த ஊருக்கு அரசனாக இருந்தான்.

னுக்கு மிகுதியாக நின்றவை ஒரு வீடும் கொஞ்சம் நிலமும்தான்.

சிநேகிதர்கள் அவனை விட்டு விலகிவிட்டனர். அவர்கள் எல்லாரும் கும்பலாக அவன் வசித்த தெருவின் கோடியில் இருந்த பஜனைமடம் ஒன்றில் கூடிக்கொண்டு அவனைக் கண்டபடி திட்டியும் ஏளனம் செய்தும் அவன் மனத்தைப் புண்படுத்தினர்.

திருந்திய அமரநாதன், ஒரு விரதம் எடுத்துக் கொண்டான். தினந்தோறும் சாயந்தரம் ஊருக்கு வெளியேயுள்ள ஒரு சத்திரத்தில் போய் உட்கார்ந்து கொள்வான். அந்த ஊருக்குப் புதிதாக யாராவது வந்தால் அவர்களைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று, இரவு

## 3

அமரநாதனின் சிந்தனை கலைந்தது. சாப்பாடும் முடிந்தது.

மந்திரியுடன் கொலு மண்டபம் சென்று சிம்மாசனத்தில் உட்கார்ந்தான் அவன்.

மந்திரியை அழைத்து, பிள்ளையார் கோயில் தெருவில் பதினெட்டாவது வீட்டில் இருக்கும் நீலாவதி அம்மாளுக்கு (அவனுடைய தாயார்) ஒரு பை நிறையத் தங்க நாணயங்கள் கொடுக்கும்படியும், அதே தெருவில் பஜனை மடத்தில் உள்ள காலிப் பிள்ளைகளைப்

பிடித்துச் சிறையில் அடைக்கும்படியும் உத்தரவிட்டான்.

மாலையில் தோட்டத்திற்குச் சென்று உலாவினன். இரவு போஜனத்திற்குப் பிறகு, பால் சாப்பிட்டுவிட்டு மறுபடியும் பஞ்சணையில் படுத்தான்.

## 4

மெதுவாகக் கண்களைத் திறந்தான் அமரநாதன். சூரிய வெளிச்சம் அறையினுள் புகுந்து கொண்டிருந்தது. ஆனல் திடீரென்று அவன் பரபரப்படைந்து எழுந்து உட்கார்ந்தான்.

அவன் படுத்திருந்தது அவன் வீட்டில், அவன் அறையில், அவனுடைய சாதாரண கட்டிலில் தான். எதிரே அவனுடைய தாயார் நின்ருள்.

"எண்டா அமரநாதா! நேற்றெல்லாம் எங்கேடா போயிருந்தாய்?" என்ருள் பரிவுடன்.

"அம்மா! நான் சாதாரண அமரநாதன் அல்ல. இந்த ஊர் ராஜா நான் தான்" என்ருன்.

அவனுடைய தாயாருக்குப் 'பக்' கென்றது.

"என்ன சொல்றே நீ! சொப்பனம் கண்டாயோ?" என்ருள்.

"சொப்பனமா? நிஜமாக நான்தான் இந்த ஊர் ராஜா.."

"அமரநாத்! தத்துப்பித்துன்னு எதாவது உளருதே. நீ சொல்கிற பேச்சை ராஜா கேட்டால் நமக்குப் பெரும் ஆபத்து ஏற்படும். நேற்றுத் தான் நம்மீது இரக்கப்பட்டு ராஜா ஒரு பை நிறையப் பணம் அனுப்பினர். பஜனை மடத்தில் இருந்த சோம்பேறிகளையும் நன்ருகத் தண்டித்துவிட்டார்."

அமரநாதன் தன் கட்டிலில் இருந்து எகிறிக் குதித்தான்.

"அம்மா, அம்மா! நான்தான் அந்தப் பணப்பையை அனுப்பினேன். நான்தான் அந்தத் துஷ்டர்களுக்கும் தண்டனை கொடுத்தேன். நான்தான் ராஜா" என்று சொல்லிச் சிரித்தான்.

அவன் தாய் பயந்து உடனே அந்த அறையைப் பூட்டிவிட்டாள்.

அமரநாதன் கத்தினன். அடித்துக்கொண்டான். அவன் 'இனி நான்தான் ராஜா என்று சொல்லுவதில்லை' என்று உறுதி கூறியபிறகு தான் நீலாவதி அந்த அறையைத் திறந்து வெளியே விட்டாள்.



மாலை மறுபடியும் சத்திரத்திற்குச் சென்றான். வழக்கம்போல் அன்று ஓர் ஏழை நெசவாளி அவனுடைய வீட்டிற்கு அதிதியாக வந்தான். இரவு இருவரும் சாப்பிட்டுவிட்டுப் பிறகு வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். தான் ஒரு நாள் ராஜாவாக இருந்தது போன்று தனக்கு ஏற்பட்டிருந்த பிரமையையும் நெசவாளியிடம் சொன்னான். அவன் விழுந்து விழுந்து சிரித்தான்.

## 5

**ம**று நாள் கண் விழித்தான் அவன். திரும்பப் பஞ்சணை; அதே அரண்மனை உப்பரிகை; சங்கீத ஒலி; தாதியின் வேண்டுகோள். கண்களை நன்றாகத் துடைத்துக் கொண்டான் அவன்.

“மகாராஜ்! தந்த சுத்தி செய்ய” என்றாள் பணிப்பெண்.

“சட்! நிறுத்து..இது என்ன சூது?..முந்தா நாள் ராஜா, நேற்று சாதாரண மனிதன், இன்று ராஜா! பச்சோந்தி நிறம் மாறுவதுபோல் நான் தினம் தினம் மாறுகிறேனே..” என்றான் கோபத்துடன்.

அதே சமயத்தில் எதிர் அறையில் சந்நியாசி வேஷத்தில் வந்தவனின் முகம் தெரிந்தது.

சட்டென்று அமரநாதன், “அந்த அயோக்கியனால் வந்தது தான் இவ்வளவும்” என்று கறுவிக் கொண்டு தன் உடைவாளுடன் அவனை நோக்கி ஓங்கினான். இதற்குள் மந்திரி அவனைத் தடுத்து நிறுத்தி, “அவர்தான் இந்த நாட்டின் உண்மையான அரசர். அவரைக் கொல்லப் பார்க்கிறாயே!..” என்றான்.

அமரநாதன் உடல் நடுங்கியது. அரசனின் கால்களில் அவன் விழுந்து, “அரசே, நான் தெரியாமல் செய்த பிழையை மன்னித்து விடுங்கள்” என்றான்.

“அமரநாதா! எழுந்திரு. முதல் நாள் நானும் என் மந்திரியும் மாறுவேஷத்தில் ஊர் சுற்றி வரும்போது உன்னைக் கண்டு உன் வீட்டிற்கு வந்தோம். உன் கஷ்டங்களைக் கேட்டு மனம் வருந்திய நான், உன்னைக் கொண்டே உன் துஷ்ட நண்பர்களைத் தண்டிக்கச் செய்ய எண்ணினேன். பாலில் மயக்க மருந்தைக் கலந்தேன். நீ மயங்கிய பின் உன்னை அரண்மனைக்கு எடுத்து வந்தோம். நீ தான் ராஜா என்று எல்லாரும் நடந்துகொள்ள வேண்டும் என்று நான் உத்தரவிட்டேன். எல்லாம் திட்டப்படி நடந்தது. மறுபடியும் பாலில் மயக்க மருந்தைக் கலந்து உன்னை நேற்று உன் வீட்டில் கொண்டு விட்டோம். திரும்ப உன்னை வேடிக்கை செய்ய வேண்டும் என்று எனக்குத் தோன்றியதால், நேற்று நெசவாளிபோல் வந்து, திரும்ப உன்னை மயக்கி எடுத்து வந்து விட்டேன். இன்று முதல் உன்னை என்னுடைய பிரத்தியேக மெய்காப்பாளனாக நியமித்துள்ளேன்..”

அரசனுக்குத் தன் நன்றியை எவ்வாறு தெரிவிப்பதென்று அமரநாதனுக்கு விளங்கவேயில்லை.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

21128
சென்னை-600 008

# கண்ணன் தபால்

## தகப்பனுர் கடிதம்

அன்புடையீர்,

வணக்கம். கண்ணன் தீபாவளி மலர் வந்தது. என் குழந்தைகளிடம் போய், "இங்கே கொடுங்கள்; நான் முதலில் பார்த்துவிட்டுத் தருகிறேன்'' என்று சொல்லி வாங்கினேன்.

உபஜனுதிபதியின் ஆசியுடன் ஆரம்பிக்கும் மலர் ஓர் அரிய பொக்கிஷத்தையே அடக்கிக் கொண்டிருக்கிறது. ராஜாஜியின் 'கொழுக்கட்டை' கதை மிக அருமையாக இருக்கிறது. மலர் பூராவையும் படித்துவிட்டுத்தான் அவர்களிடம் கொடுத்தேன். அவ்வளவு சுவாரஸ்யம்! கதைகள் ஒவ்வொன்றும் மணி மணியாக மிகச் சிரமப்பட்டுப் பொறுக்கி எடுத்து வெளியிட்டிருக்கிறீர்கள். தமிழ் நாட்டுக் குழந்தைகள் அதிர்ஷ்டசாலிகள்தான்!

—R. S. குஞ்சிதபாதம், F/o K. வரதராஜன், மணல்மேடு.

## தாயின் கடிதம்

ஆசிரியர் அவர்களுக்கு,

சிரஞ்சீவி ராஜாமணியின் தாயார் நான். கண்ணன் தீபாவளி மலர் கிடைத்ததும் என்ன பரபரப்பு; சந்தோஷம், போங்கள் அவனுக்கு! எனக்கும் அப்படித்தான். "புஸ்வாணம் ஜாக்கிரதை!'' என்ற படத்தை என்னை வெட்டி ஒட்டித் தரச் சொன்னுன்.

நானும் படித்தேன். அதைப் படித்து முடித்ததும் எனக்குப் பத்து வயதுப் பெண்ணுக மாறிவிட்டதுபோல் ஒரு பிரமை ஏற்பட்டது.

நீங்கள் மிக அருமையாக வெளியிட்ட மலருக்கு நன்றி. உங்கள் தொண்டு வளர்க!

—K. ராஜம்மாள், பெங்களூர்.

## ரஸிகரின் கடிதம்

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு,

நமஸ்காரம். 'கண்ணன்' தீபாவளி மலரைத் தீந்தேனினும் இனிப்பாகக் கற்கண்டைவிட ருசியாகக் கொண்டு வந்திருக்கிறீர்கள்! என் மலையாள நண்பர் ஒருவர் மலரைப் பார்த்துவிட்டு ஆச்சரிய மிகுதியால் அப்படியே ஸ்தம்பித்துவிட்டார். "இது தமிழ்ப் பத்ரமாணோ?'' என்று அவர் கேட்டது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு அழகாக ஆங்கிலத்தைத் தவிர வேறு பாஷைகளில் பத்திரிகைகள் வெளிவர முடியாது என்பது அவர் அபிப்பிராயம். நல்ல விஷயங்களைச் சேகரித்துக் கலைக் களஞ்சியமாகத் தயாரித்திருக்கிறீர்களே! தங்களுக்கு என் பாராட்டுதல்கள்!

—K. A. நம்பி, கிருஷ்ணன்கோயில், நாகர்கோயில்.

## ஆசிரியரின் கடிதம்

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். தங்களுடைய மலர் தமிழ் மணம் கமழ்கிறது. தலைவர் ராஜாஜி பட்டாஸ் கட்டைவிட, பக்தி செய்வதில் நாட்டம் வேண்டும் என்று கதையாகக் கூறுவது என் கருத்தைக் கவர்ந்து விட்டது. மலரில் உள்ள ஒவ்வொரு அம்சமும் குழந்தைகளுக்கு ஏற்ற முறையில் அமைந்திருப்பது கண்டு உங்களை வாழ்த்துகிறேன். ஆசிரியர்களின் அன்பு உரித்தாகுக.

—கே. வேதாசலம், நெம்மேலி.

Reg. No. M. 5542

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★


## புதிய கண்ணன் வெளியீடுகள்

# விளையும் பயிர்

கி. வா. ஜகந்நாதன் எழுதியது

**ந**ம்மிடையே வாழ்ந்த, வாழுகின்ற பெரியோர்கள் உங்களைப்போலிருந்த காலத்தில் எப்படி இருந்தார்கள்? எப்படி விளையாடினார்கள்? எப்படிப் படித்தார்கள்? என்ன என்ன குறும்புத்தனங்கள் செய்தார்கள்? இதையெல்லாம் நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா? அவற்றிலிருந்து நாம் எவ்வளவோ அறிந்துகொள்ளலாமே! காந்திஜி, நேருஜி, டாகுர், பாரதியார், ராஜேந்திரப் பிரஸாத், ஆஸாத், டாக்டர் சாமிநாதையர் முதலிய பெரியார்களுடைய விளையாட்டுப் பருவத்து நிகழ்ச்சிகளைச் சுவைபட, கதைபோல ஆசிரியர் வர்ணிக்கிறார். அருமையான புத்தகம்; அவசியம் படிக்கவேண்டிய புத்தகம்.

**விலை 8 அணா**

# விஞ்ஞானம் பேசுகிறார்

ஆசிரியர்கள்:

பெ. நா. அப்புஸ்வாமி, ஜே. பி. மாணிக்கம்

**நா**ம் தினசரி பல பொருள்களை உபயோகப் படுத்துகிறோம். பல பொருள்களின் உபயோகங்களையும் உணர்ந்திருக்கிறோம். அவை எப்படி வேலை செய்கின்றன என்பதைத் தெரிந்துகொள்வது நல்லதல்லவா? மொத்தம் 12 பொருள்களைப்பற்றி இதில் சித்திரங்களாக விவரிக்கப்பட்டுள்ளன. அதைக் கண்டுபிடித்தவர் யார், அதன் உபயோகம் என்ன - இவை போன்ற விஷயங்களை எல்லாம் குழந்தைகள் தினசரி அரைமணி நேரம் செலவிட்டால் போதும்; 12 நாட்களில் தெரிந்துகொண்டு விடலாம். விலை மலிவு; பயன் அதிகம்.

**விலை 8 அணா**

**கண்ணன் அங்கத்தினர்களுக்குக் கமிஷன் உண்டு.**

**கண்ணன் காரியாலயம்**

**மயிலாப்பூர் :: :: சென்னை—4.**


★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

## புதிய கண்ணன் வெளியீடுகள்

# விஞ்ஞானம் பேசுகிருர்

ஆசிரியர்கள்:

பே. நா. அப்புஸ்வாமி, ஜே. பி. மாணிக்கம்

**நா**ம் தினசரி பல பொருள்களே உபயோகப் படுத்து கிருேம். பல பொருள்களின் உபயோகங்களேயும் உணர்ந்திருக்கிருேம். அவை எப்படி வேலே செய்கின் றன என்பதைத் தெரிந்துகொள்வது நல்லதல்லவா? மொத்தம் 12 பொருள்களேப்பற்றி இதில் சித்திரங்களாக விவரிக்கப்பட்டுள்ளன. அதைக் கண்டுபிடித்தவர் யார், அதன் உபயோகம் என்ன - இவை போன்ற விஷயங்களே எல்லாம் குழந்தைகள் தினசரி அரைமணி நேரம் செல விட்டால் போதும்; 12 நாட்களில் தெரிந்துகொண்டு விடலாம். விலே மலிவு; பயன் அதிகம்.

**விலே 8 அணு**

# ப வ ழ வ ல் லி

**கி. ரா. எழுதியது**

**அ**து ஒரு தனி உலகம். அங்கே வசிக்கும் மனிதர் கள் எல்லாரும் விசித்திரமானவர்கள். பிராணிகளும் விசித்திர இயல்பு கெண்டவை. முத்துக்களும், நவரத்தி னங்களும், பவழங்களும் விளேயும் நாடு. அங்கே போய் எப்படியோ அகப்பட்டுக் கொள்கிருன் சுந்தரம். பாதி உடல் மனிதர்களேப் போலவும் பாதி உடல் மீனுகவும் இருந்த ராஜகுமாரி பவழவல்லியைச் சந்திக்கிருன். ஆமை ஒன்று அவனுல் ஆகாத காரியத்துக்கெல்லாம் உதவுகிறது. பலவித சோதனேகளில் அகப்பட்டுக்கொண்டு, கடைசி யாக ராஜகுமாரியைப் பார்க்க வருகிருன். அப்போது தான்,— மிகவும் சுவாரஸ்யமான கதை. அழகான படங் கள் நிறைந்தது.

**விலே 12 அணு**

கண்ணன் அங்கத்தினர்களுக்குக் கமிஷன் உண்டு.

**க ண் ண ன் கா ரி யா ல ய ம்**

**மயிலாப்பூர் :: :: சென்னே—4.**

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

Reg. No. M. 5


# சந்திரகிரிக்கோட்டை

'ஜரு'

எழுதிய புதிய தொடர்கதை

**கண்ணன்**

பொங்கல் இதழில் ஆரம்பமாகிறது


